
# ஜாமக்காரன்

WATCHMAN



காவல்காரன்

(ஜாமக்காரனில்) எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள். 1 தெச 5:21

ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான், ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். 1 கொரி 2:15.

0427 - 2387499. E-mail : jamakaran@yahoo.com. Fax: 0427- 2386464. www.jamakaran.com



**கர்த்தருக்குள் அன்பான வாசகர்களுக்கு,**

**கர்த்தரின் சமாதானம் உங்களுக்குள்ளே பெருகக்கடவது,**

உங்களுடைய பிள்ளைகள் 10,12ம் வகுப்பில் தேர்ச்சி பெற்று இருப்பார்கள் என்று நம்புகிறேன். பிள்ளைகளுக்காக நாங்களும் ஜெபித்தோம். வெற்றிப்பெற்ற பிள்ளைகளை இயேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். பிள்ளைகளை நல்ல பள்ளியில் சேர்த்து இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நம் பிள்ளைகள் நம்முடைய வாழ்க்கையில் முக்கியமானவர்கள். எனவே அவர்களுக்கு நல்ல கல்வியை கொடுப்பது நமது கடமையாகும். ஆண் மற்றும் பெண்பிள்ளைகளை கூடுமானவரை பெற்றோர்கள் அடிக்கடி கண்காணிக்கவேண்டும். அவர்களுடைய நண்பர்கள் யார் என்றும், அந்த நண்பர்கள் எப்படிப்பட்ட பழக்கம்உள்ளவர்கள் என்றும் நாம் ஆராயவேண்டும். படிக்கும்காலத்தில் இவர்கள் பலவிதமான சோதனைகளில் சிக்கிக்கொள்கிறார்கள். அவர்கள் சோதனையில் அகப்பட்ட பிறகுதான் நாம் கண்ணீரோடு பலரிடம் ஆலோசனை கேட்கிறோம். அதன்பிறகு அதை உங்களால் சரிப்படுத்தமுடியாமலே போகிறது. அதேபோல் படிக்கும் காலத்தில் தேவையில்லாமல் அவர்களுக்கு டூவீலர் மற்றும் கார் போன்ற வாகனங்களை வாங்கித் தரக்கூடாது. அதனால் சோதனை நிறைய வரும்,அதோடு ஆபத்தும் தானாக அவர்களை தேடிவரும். அதன்மூலம் உங்கள் பிள்ளைகளை நீங்கள் இழக்க நேரிடும். அதனால் பிள்ளைகளுக்காக தினமும் நீங்கள் ஜெபிக்கவேண்டும்.

## கள்ள போதகர்கள் ஜாக்கிறதை!

' இப்போதெல்லாம் நாளுக்குநாள் கள்ளபோதகர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகிறது. சமீபத்தில் **திருச்சி சீயோன் விசுவாச கூடாரம்**(ZFT) Zion Faith Tabarnacle என்ற சபையின் போதகர்.**விக்டர்ஞானராஜ்** அவர்களின் கள்ளஉபதேசங்களைக்குறித்து வந்த செய்திகள் ஏராளம். அவரின் TVசெய்திகளைக்குறித்துவந்த கேள்விகளும் ஏராளம். அவர் சமீபத்தில் **இலங்கையிலிருந்து** கள்ளஉபதேசங்களோடு வந்திருக்கும் **சகோ.கிர்பி டி லெனரோல்** அவர்களை அழைத்து தன் சபையில் நடத்தின கூட்டங்களைப்பற்றி ஏராளமான புகார்கள் நமக்கு வந்த வண்ணம்உள்ளன. ஏற்கனவே சிலவருடங்களுக்குமுறை **பாஸ்டர்.விக்டர்ஞானராஜ்** அவர்களின் தவறான உபதேசத்தைப்பற்றியும்,அவரின் குடும்பத்தில் ஏற்பட்ட சில பிரச்சனைகளைப்பற்றியும் ஜாமக்காரனில் நான் எழுதி எச்சரித்தேன். பாஸ்டர் அவர்கள் என்னை நேசிப்பவர்மட்டுமல்ல,

ஜூன் 2015

பலகாலம் என்னோடு பழகியவர் ஆகும். நான் பாஸ்டரைப்பற்றி ஜாமக்காரனில் எழுதியவுடன் அவர் என்னை மிகவும் வெறுத்தார். தனக்கு இனி ஜாமக்காரனை அனுப்பவேண்டாம் என்று அறிவித்தார். மேலும் தன் சபையில் ஜாமக்காரனை யாரும் படிக்கக்கூடாது என்றும் அறிவித்தார். ஆனால் பாஸ்டரின் கள்ள உபதேசத்தைக்குறித்து அவருடைய சபைமக்கள் உணரவில்லை. இப்போது இலங்கையிலிருந்து வந்த கள்ளபோதகரான **கிர்பி டி லெனரோல்** அவர்களை அழைத்து கூட்டங்கள் நடத்தினார். அதனால் இப்போது ஒரளவு ஜனங்கள் உணர்த்தப்பட்டு அவரின் தவறான பல கள்ளஉபதேசங்களை பாஸ்டருக்கு சுட்டிக்காட்டி பாஸ்டர் அவர்களுக்கு தங்கள் எதிர்ப்புகளையும் அறிவித்தார்கள்.

‘ திருச்சபை நலனுக்காக பாடுபடும்G&T(Grace and Truth Coalition) என்ற சங்கம் ஒன்று உண்டு. அவர்கள் மூலமாக திருச்சி பாஸ்டர்.**விக்டர்ஞானராஜ்** அவர்களை நேரில் சந்தித்து அவரின் தவறான உபதேசத்தை கண்டித்து எச்சரிக்க G&T என்பவர்களிடம் சில ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.ஆனால் பலன்இல்லை. அவர்கள் எச்சரித்தார்களா இல்லையா? என்பது எனக்கு தெரியவில்லை. பொதுவாக G&T என்ற சங்கம் போதகர்களை அழைத்து கூட்ட ஏற்பாடுகளை செய்து அந்த கூட்டங்களில் சிலரின் தவறான உபதேசங்களை குறிப்பிட்டு அதை சுட்டிக்காட்டி அந்த கூட்டத்தில் கலந்துக்கொண்ட பாஸ்டர்களிடம் பகிர்ந்துக்கொள்வார்கள்,அவ்வளவே?. மற்றபடி தவறான உபதேசம் செய்யும் போதகர்களை அவர்கள் நேரில் சென்று கண்டிக்கவோ! எச்சரிக்கைவோ! செய்யமாட்டார்கள். இந்நேரம் பாஸ்டர். விக்டர்ஞானராஜ் அவர்களின் டிவி செய்திகளையும் அவருடைய சபை செய்திகளையும் கேட்ட எத்தனையோ ஆயிரம் மக்கள் அவரின் பிழையான உபதேசத்தில் விழுந்துபோயிருப்பார்கள் என்பது நிச்சயம்.



‘ பாஸ்டர்**விக்டர்ஞானராஜ்** அவர்கள் பெங்களூரில் FEBA வானொலியில் பொதுமக்கள் தொடர்பு அதிகாரியாக பணியாற்றியபோது எத்தனை நல்ல ஆவிக்குரிய ஞானம் பெற்றவராகஇருந்தார் என்பது எனக்கு தெரியும். சகோ.தினகரன் ஊழியத்தில் அவரின் ஆரம்பகால தவறான உபதேசத்தை முதலாவது தைரியமாக எதிர்த்து என்னோடும் மற்ற நண்பர்களோடும் பகிர்ந்துக்கொண்டவரே இவர்தான். **சகோ. தினகரன்** அவர்கள் ஜெபத்தில் பேசும் அந்நியபாஷையை ஜெபத்தில் கூறிய வெளிப்பாடுகளைக்குறித்து தாக்கி பேசியேதோடு மட்டுமல்லாமல், அந்த **அந்நியபாஷை** தவறு என்று வசன ஆதாரங்களோடு என்னிடம் தனிப்பட்டமுறையில் பகிர்ந்துக்கொண்டவரும் அவர்தான். அப்படிப்பட்டவர் இன்று மிகமிக தவறான ஊழியபாதையில் பயணமாகி ஏராளமான மக்களை வசனத்திலிருந்து விலக்கிக்கொண்டிருப்பதை காணும்போது பாஸ்டர் அவர்கள் அடிபாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருப்பதை உணரமுடிகிறது. தான் பாதாளத்தில்போவதுடன் தன் குடும்பத்தையும், ஒன்றுமறியா தன் சபைமக்களையும்,TVயில் காணும் பல லட்ச கிறிஸ்தவமக்களையும் மிக தவறான உபதேசம் மூலமாக பிசாசின் கையில் கொண்டுபோய் சேர்க்கிறார். யார் இவரை தடுப்பார்கள்?. தினசரி இவர் **பரலோகம்**போவதையே சகோ.**தினகரனிடமிருந்து** தான் இவர் கற்றுக்கொண்டார். அவரைவிட ஒருபடி உயரத்தில்ஏறி பரலோகத்தில் கண்,காது,கிட்னி, இருதயம் போன்ற மனித உறுப்புகள் கிடைக்கும் கிடங்கை தான் கண்டுபிடித்தாக அறிவிக்கிறார். பல தூதர்கள் மனிதஉறுப்புகளை அங்கிருந்து எடுத்து மானிடர்வாழும் உலகத்தில் ஊழியர்கள் சுட்டிக்காட்டும் மக்களுக்கு அந்த தூதர்மூலமாக உடல் உறுப்புகளை சப்ளைசெய்து அவர்களை சுகமாக்குவதாகவும் இவர் அறிவிக்கிறார் என்று கூறப்படுகிறது.

‘ Spritual Laughter ஆவியில் நிறைந்து சிரிப்பதை முதலில் தமிழ்நாட்டில் சகோ.எசேக்கியல் பிரான்சிஸ்க்கு பிறகு இவர்தான் திருச்சியில் அரங்கேற்றியிருப்பார் என்று நினைக்கிறேன். இது கனடா நாட்டில் சில வருடங்களுக்குமுன் **ஆவியில் நிறைந்து சிரிப்பது** என்ற **கள்ளஉபதேசம்** முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதை இவர் எப்படியோ கற்றுக்கொண்டு தன் சபையினருக்கு அறிமுகப்படுத்தி ஒரு சிலரை பைத்தியகாரர் ஆக்கிவிட்டார்.


## தன்னையே தெய்வமாக்கிய பயங்கரம்:

பாஸ்டர்.விக்டர்ஞானராஜ் அவர்கள் தன்னை தெய்வமாக்கி அறிமுகப்படுத்திய பயங்கரமும் வாசகர்கள் அறியவேண்டும். (நெல்லை)முக்கூடலில் சகோ.பாலாசீர்லாறி அவர்கள் தன் மரணத்துக்குமுன் அவரின் கடைசிநாட்களில் நானே அல்லா,நானே நாராயணன்,நானே மனுஷகுமாரன் என்று கூறி மக்களை குழப்பிய உடனேயே பாலாசீர்லாறி என்பவர் மரித்துப்போனார். இப்போது அவருடைய மகன் தன் தகப்பனாகிய பாலாசீர்லாறியை தெய்வமாக்கி ஜனங்களுக்கு காண்பிக்க முயலுகிறார். அவரும் இப்போது ஒரு கூட்டமக்களை குழப்பிக்கொண்டிருக்கிறார். மரித்துப்போன பாலாசீர்லாறி அவர்கள் இப்போதும் வியாதி படுக்கையில் இருந்த பலரை நேரில் வந்து தரிசனம் தந்து வியாதிகளை சுமாக்கியதாக விளம்பரபடுத்துகிறார். குறிப்பாக ஒரு இஸ்லாமியர்குடும்பத்தில் ஒருவரை சுகமாக்கிய சாட்சியை விளம்பரப் படுத்தியுள்ளனர். மரித்துப்போன சகோ.லாறியே அந்த இஸ்லாமிய மதத்தை சேர்ந்த வியாதியஸ்தர் வீட்டுக்கு நேரில் சென்று அவரை சுகமாக்கியதாக சாட்சிகள் எழுதி துண்டுபிரதிகள் மூலமாக வெளியிட்டார்கள். இது லாறியை தெய்வமாக்க இவர்கள் குடும்பமாக செய்யும் பெரிய மோசடி ஆகும். அதைப்போலவே பாஸ்டர்.விக்டர் ஞானராஜ் அவர்களும் தரிசனம் மூலமாக தன்னிடம் ஜெபிக்க கேட்டுக்கொண்ட வியாதிஸ்தரின் வீடுகளுக்கேசென்று பலருடைய வியாதிகளை அவர்களின் தரிசனம் வழியாக குணப்படுத்தியதாக சாட்சிகளை வெளியிறக்கியிருக்கிறார்!.



## கிர்பி என்ற கள்ள ஊழியர்:

இலங்கையில் கிர்பி என்ற ஊழியர் மிக பிழையான உபதேசத்தை அறிவிக்கிறார் என்று இலங்கையில் நான் ஊழியம் செய்தபோதே பலர் என்னிடம் அறிவித்தார்கள். அவர் அமெரிக்காநாட்டு குடியுரிமை பெற்றவர்.



சகோ.கிர்பி

கிர்பி அவர்கள் தனக்கு மரணம் இல்லை என்கிறார். கிர்பி அவர்கள் தான் ஆகாரம்எதுவும் பல வருடங்களாக சாப்பிடுவதில்லை என்றும் கூறுகிறார். இதுபோல அமெரிக்காவில் கோபஸ்வேன் என்பவரும், தமிழ்நாட்டில் நெய்வேலி என்ற ஊரில் சகோதரி.ராக்கினிமேரி என்பவரும் இன்னும் சில ஊழியர்களும் இயற்கை காற்று வழியாக ஆகாரம் என் சரீரத்துக்குள் போகிறதால் சாப்பாடு எதுவும் சாப்பிடாமல் முழு பெலத்தோடு வாழுகிறேன் என்றும் இவர்கள் பச்சை பொய் பேசுகிறார்கள். இவர்களில் ஒருவரிடம் நான் டாக்டர் என்ற முறையில் அவரை பரிசோதனை செய்ய அனுமதிக்கவேண்டும் என்று கேட்டேன் மறுத்து விட்டார்கள்.

சில வருடங்களுக்குமுன் அவர்கள் கள்ள ஊழியர் என்று சகல புகைப்பட ஆதாரத்துடன் அவரைப்பற்றி ஜாமக்காரனில் எழுதி வெளியிட்டேன். தனக்கு இறைப்பையும்,குடலும் இல்லை என்று ஒரு சகோதரி தன் சாட்சியை கூட்டத்தில் பகிரங்கமாக கூறினார்கள். அதற்கு நான் அந்த சகோதரியிடம் அவரை எக்ஸ்ரே எடுக்க அனுமதிக்கவேண்டும் என்றேன்.அதற்கும் அவர் சம்மதிக்கவில்லை. ஜாமக்காரனில் இவர் புளுகு சாட்சிகளை வெளியிட்டப்பின்தான் தமிழ்நாட்டிலும்,கேரளத்திலும் யாரும் இவர்களை பிரசங்கிக்க இப்போது அழைப்பதில்லை. கேரளத்தில் IPC சபையில் இவரை அழைத்து கூட்டம் நடத்திய ஒரு பாஸ்டர் கூறினார். தன்னை அந்த பெண் பொய் சாட்சி சொல்லி ஏமாற்றிவிட்டாள் என்றும், கூட்டம் நடத்தி சேர்த்த நான்கு நாள் காணிக்கையை அப்படியே அவளிடம் கொடுத்துவிட்டேன் என்றும் கூறினார். அதன்பிறகு அந்த பாஸ்டரே எல்லா சபைகளுக்கும் இப்படிப்பட்ட கள்ள ஊழியர்களைக்குறித்து அறிவித்து இவர்களிடம் ஜாக்கிறதையாக இருக்கும்படி கேட்டுக்கொண்டதாக அந்த பாஸ்டரே எனக்கு அறிவித்தார்.

' அன்பானவர்களே! இப்படிப்பட்ட ஊழியர்களை யாரும் நேரில் சென்று எச்சரிக்க முடியாது- அப்படி பேசமுற்பட்டால் வாக்குவாதம்தான் உண்டாகும். மேலும் தங்களை இவர்கள் திருத்திக்கொள்ளவும்

**மாட்டார்கள். G & T போன்ற ஸ்தாபனங்கள் பிரசங்கத்தில் இப்படிப்பட்ட கள்ள ஊழியர்களின் கள்ள உபதேசத்தைக் குறிப்பிட்டுமட்டும்தான் பேசுவார்கள். அதுவும் இவர்களின் பெயர்களைக்கூட அவர்கள் வெளிப்படையாக கூறமாட்டார்கள். பின் எப்படி மக்களுக்கு கள்ள போதகர்களைப்பற்றிய விழிப்புணர்வு உண்டாகும்?.**

## மீண்டும் இளம்பங்காளர்திட்ட விளம்பரம்:

**கர்த்தர் தன்னிடம் சொன்னார் என்று சகோ.தினகரன் அறிவித்த இரண்டாவது பொய் அறிவிப்புதான் இளம்பங்காளர் திட்டம் என்பது. காருண்யா கல்லூரி கடனை அடைக்க தந்திரமாக அறிவித்த பணம் சேர்க்கும் மோசடி திட்டம் தான் இது. ஒரு பிள்ளைக்கு 3000 செலுத்தினால் அதோடு மாதம் 100ரூபாயும் செலுத்தி வந்தால் 25 வருடத்துக்கு அந்த பிள்ளைகளுக்கு விபத்தோ-வியாதியோ வராது என்றும், அதோடுமட்டுமல்ல, இளம்பங்காளர் திட்டத்தில் சேர்க்கப்பட்ட பிள்ளைகள்தான் மாநிலத்தில் முதல் மார்க் வாங்கி தங்கமெடலும் வாங்கியுள்ளார்கள். நீங்களும் இந்த திட்டத்தில் 3000 கொடுத்து சேருங்கள் என்று படத்தோடு சில விளம்பரங்களை வெளியிட்டு மக்களை அதுவும் சிறுபிள்ளைகளை ஏமாற்றினார்.**




**இந்த பயங்கர மோசடியை நம்பின பிள்ளைகள் தங்கள் பெற்றோரை வற்புறுத்தி 3000ரூபாய் செலுத்தி புகைப்படத்தையும் அனுப்பினார்கள். இந்த வகையில் சேர்ந்த கோடிகள் ஏராளம்.**

**இதைக்குறித்து சத்திய வேதாகம திறவுகோல் என்ற பத்திரிக்கை ஆசிரியர் தன் பத்திரிக்கையில் கீழ்கண்டவாறு எழுதி தைரியமாக மக்களை எச்சரித்தார்.**



STD XII

AKANSHA AJITH

1192 / 1200

STATE 1st RANK

(in Biology & Sanskrit)

STATE 2nd RANK

(Overall, Maths, Physics & Chemistry)

STD X

HEMA VARSINI G

500/500

STATE 1st RANK

(Overall, French, English, Maths, Science & Social)

தயவு செய்து இவ்விரண்டு பெண்களின் படத்தை பாருங்கள். கல்லையும் கட்டையையும் தெய்வமாக எண்ணி வழிபடுகிற பிள்ளைகள். ஆனாலும் தங்கள் பிரயாசத்தின் மூலம் எவ்வளவு மார்க் வாங்கியிருக்கிறார்கள் பார்த்தீர்களா? ஆண்டவரின் பேரை சொல்லி கழிசடைகள் நடத்திக்காட்டும் பிரார்த்தனை கூட்டத்தில் பங்குபெற்ற ஒரு பிள்ளை இப்படி மார்க் வாங்கியிருந்தால் ஊரே ரெண்டு பட்டிருக்கும். எங்கள் கூட்டத்தில் வந்து பங்குபெற்றபடியினால்தான் என்று சொல்லி தாங்கள் நடத்தும் இயேசு சிரிக்கிறார், இயேசு சாப்பிடுகிறார், இயேசு தூங்குகிறார் என்கிற பத்திரிக்கையில் அட்டை படத்தில் இவர்களின் பெயரை போட்டு அதன்மூலம் ஒரு விளம்பரத்தை யும் செய்து அதையே காசு சேர்க்கும் வேலையிலும் இறங்கியிருப்பார்கள். கிறிஸ்தவ பிள்ளைகள் அல்லாதவர்களின் படத்தை போட்டு விளக்கி கூறினாலும் கழிசடைகள் தங்களை மாற்றிக்கொள்ள வில்லையென்றால் இன்னமும் நாம் என்னத்தான் சொல்லி இவர்களை விளங்க வைப்பது?

இப்படி துணிகரமாக **காணிக்கை** என்ற பெயரில் **பணக்கொள்ளையடித்து** மக்களை குறிப்பாக **சிறுபிள்ளைகளையும்** ஏமாற்றும் இவர்களை ஜனங்களுக்கு எப்படி அடையாளம் காட்டுவது. இவர்கள் **கள்ளஊழியர்கள்** ஆவார்கள். இவர்களிடம் பணம் கொடுத்து ஏமாறாதீர்கள்! என்று மக்களை எச்சரிப்பது எப்படி?.

## இதற்கு வழிதான் என்ன?

முன்பு நான் குறிப்பிட்ட இப்படிப்பட்ட கள்ள ஊழியர்களை ஜனங்களிடம் அடையாளம் காட்டி மக்களை யார் ஜாக்கிறதைப்படுத்தமுடியும்?.

அனைத்து சபை பாஸ்டர்களையும் ஒன்று கூட்டி இவர்களைக்குறித்து கண்டித்துபேச ஏற்பாடு செய்தால் என்ன?என்று சிலர் கேட்டார்கள். இப்போதுள்ள பாஸ்டர்கள் ஊழியர்கள் அனைவரும் கரிஸ்மேட்டிக் உபதேசங்களில் அகப்பட்டுள்ளவர்களாகும். இவர்கள் அத்தனை பேர்களிடமும் பொய்யான **அந்நியபாஷையும்**, பொய்யான **தரிசனங்களும்** நிறைய உண்டு. இவர்கள் எப்படி இப்படிப்பட்ட ஊழியர்களைக்குறித்து எச்சரிக்க முடியும்!. இவர்களுக்கே அந்த தகுதியில்லையே?. இப்போதுள்ள நம் தமிழ் கிறிஸ்தவ **டிவி ஊழியர்கள்** பெரும்பாலானவர்கள் **கிர்பியைப்போல, விக்டர் ஞானராஜவைப்போல பொய்யான தரிசனம்** காண்பவர்களாகும்.

' இப்போதுள்ள அத்தனை டிவி பிரசங்கிமார்கள் யாவரும் **சகோ.தினகரன்** அவர்களிடம் பயிற்சி பெற்று ஜெபத்தில் துணிந்து பொய் தீர்க்கதரிசனம் பேச கற்றுக்கொண்டவர்கள். **இதன் நதிமூலமே** சகோ.தினகரன் அவர்களாகும். இந்த பொய்திட்டத்தைக்குறித்து சகோ.தினகரன் அவர்கள் அறிவித்த எல்லா திட்டங்களையும் **கர்த்தர் தன்னிடம் சொன்னார்** என்றுதான் பொய்கூறி ஆரம்பித்தார். அந்த பணத்தில்தான் **காருண்யா கல்லூரி** கட்டினார். கூடுதல் பணத்தேவைக்காக **கர்த்தர் சொன்னதுதான்** இந்த **இளம்பங்காளர்திட்டம்** என்று கூறி ஒரு குழந்தைக்கு 3000 என்று ஒவ்வொரு குடும்பத்திலும் பணம் சேகரித்தார்கள். இப்போது தினகரனின் மகன் அதே ஏமாற்று ஊழியத்தை தொடருகிறார்.

' கர்த்தரின் பெயரை அன்று தினகரன் அவர்கள் தவறாக உபயோகித்ததற்காக சகோ.தினகரன் தன் **ஒரே மகளை** இழக்கநேர்ந்தது. அவ்வளவு பெரிய **மரணஎச்சரிப்பு** வந்தும் சகோ.தினகரன் அவர்கள் தன்னை மாற்றிக்கொள்ளவில்லை. **ஜெபத்தில்பெயர்அழைக்கும்** நுணுக்கத்தை தன் மகன் **பால்தினகரன்** முதல்-**மோகன் சி.லாசரஸ்வரை** சொல்லி கொடுத்துவிட்டார். ஏறக்குறைய தமிழ்நாட்டில் இப்போதுள்ள அத்தனை **டிவி ஊழியர்களும்** ஜெபத்தில் பெயர் அழைக்க ஆரம்பித்துவிட்டனர். அதோடு ஜனங்களின் அனுதாபத்தைப்பெற பிரசங்கத்தில் இவர்கள் கண்ணீர்விட்டு போலியாய் அழத்துடங்கிவிட்டார்கள். மகன்.**பால்தினகரனும் அழுகிறார்.** சகோ.மோகன் சி.லாசரஸ்சும்,கார்முதலாளி சகோ.**ஸ்டீபனும்** சில மாதங்களாக பிரசங்கத்திலும், ஜெபத்திலும் **அழ ஆரம்பித்துவிட்டார்கள்.** இவர்கள் அழுவதைப்பார்த்து கூட்டத்தில் உள்ளவர்களும் அழ ஆரம்பித்துவிட்டார்கள். அழுகிறவர்களை வீடியோ-புகைப்படம் எடுத்து, கூட்டத்தில் **மக்கள் அழுவதை** பெரிய வால்போஸ்டர்களில் அச்சடித்து விளம்பரபடுத்துகிறார்கள். அதைப்பார்த்து மக்கள் ஏமாறுகிறார்கள்.

' 19.6.2015 வெள்ளிகிழமை காலை ஏஞ்சல் டிவியில் சகோ.ஸ்டீபன்(கார் வியாபாரம்) அவர்கள் பேசியது: இப்போது நான் ஜெபிப்பதை பலர் பார்த்து சுகம் பெற்றுவிட்டனர். ஆவியானவர் எனக்கு ஒரு ஆஸ்பத்திரியை காட்டுகிறார். அங்கு கை,கால் நடக்கமுடியாதபடி படுத்திருக்கும் வியாதியஸ்தரை



கர்த்தர் காண்பிக்கிறார். அந்த ஆஸ்பத்திரி அறையில் டிவி ஸ்கீரின் இல்லை. அவரின் மகன் அறைக்குள் லேப்டாப்புடன் நுழைகிறார். அதில் நான் ஜெபிப்பதை தன் தகப்பனருக்கு போட்டு காண்பிக்கிறார். இதோ கர்த்தர் வல்லமை அவரை தொடுவதை காண்கிறேன். கைக்கு பெலத்தை கொடுத்துவிட்டார். காலையும் சுகப்படுத்திவிட்டார். சகோதரனே எழுந்து நடந்துபாருங்கள். நீங்கள் சுகமாகிவிட்டீர்கள். கர்த்தர் காண்பித்ததைத்தான் இப்போது கூறுகிறேன் என்றார். வாசகர்களே, சகோ.ஸ்டீபனின் இந்த வெளிபாட்டை நம்புகிறீர்களா? நம்பினால் அந்த அற்புதம் எந்த ஆஸ்பத்திரியில் நடந்தது, சுகமான நபரின் விலாசத்தை சகோ.ஸ்டீபனிடம் கேட்டு எனக்கு அறிவியுங்கள். எச்சரிக்கிறேன் இப்படிப்பட்ட பொய் வெளிபாடு,பொய் அழுகை தயவுசெய்து நம்பவேண்டாம்.

' **தொப்பி வியாபாரியும்-குரங்குகளும்** என்ற கதை கேட்டிருப்பீர்கள். அந்த நுணுக்கத்தைத்தான் இவர்கள் தங்கள் கூட்டங்களில் கையாளுகிறார்கள்.

' 1000ரூபாய் கொடுத்தால்**ஒரு லட்சம்** கிடைக்கும் என்பற்கு ஆதாரமாக பல **பொய் சாட்சிகளை** மிக எளிதாக இவர்கள் ஏற்பாடு செய்துவிடுகிறார்கள். அதை டிவியிலும்,பத்திரிக்கையிலும் வெளியிடுகிறார்கள்.

' இவர்களையெல்லாம் நம்பவும்,பணத்தை இவர்களுக்கு அள்ளிகொடுக்கவும் இவர்களை தங்கள் **சபைகளுக்கு அழைத்து கூட்டம்** நடத்தவும் குருட்டு பக்தியுள்ள நம் கிறிஸ்தவர்களும், நம் சபை **ஆயர்களும்,பிஷப்மார்களும்** ஏராளம் உண்டே? குறிப்பிட்ட இந்த சபை தலைவர்கள் **பிஷப்மார்கள்** யாராவது தங்கள் திருமண்டலத்தில் இவர்களின் ஏமாற்றுதனத்தைக்குறித்துப்பேசி அல்லது சபை மக்களை எச்சரித்து சபை மக்களை **இவர்கள் கையிலிருந்து** காப்பாற்றுவார்கள் என்று நினைக்கிறீர்களா? நிச்சயமாக இல்லை!. இப்படிப்பட்ட பிஷப்மார்கள் தங்கள் திருமண்டலத்தில் அல்லது சபையில் கூடுதல்

பணம்கொடுக்கும் பெரும்பான்மையாகஉள்ள பணக்கார ஆட்களின் சொல்படி கேட்டால்தான் அந்த பிஷப்மார்கள் தொடர்ந்து திருமண்டலத்தில் ஊழியம் செய்யமுடியும். அல்ல என்றால் நிம்மதியாக நிர்வாகம் செய்யமுடியாது!.

' ஊழியத்துக்காக வெளிநாட்டில் நான் தங்கியிருந்தபோதுஇரண்டு பிஷப்மார்களிடம் ஜெபத்தில் பெயர் அழைக்கும் இப்படிப்பட்ட ஊழியர்களின் பொய் வேஷத்தைப்பற்றி கூறி இவர்களைப்பற்றிய சகல ஆதாரங்களையும் அவர்களிடம் காட்டி பிஷப்பாகிய நீங்கள் நான் காண்பித்த இந்த ஆதாரங்களை இந்தியாவுக்கு கையில் கொண்டுபோங்கள். அமெரிக்காவில் அன்று என்னிடம் பேசும்போது இந்தியா போனவுடன் இந்த ஊழியர்களை நேரில் நானே சந்திப்பேன் என்றீர்களே? அதன்படி அவர்களை நேருக்கு நேர் சந்தித்து அவர்களின் பொய்சாட்சிகளையும்,ஊழியத்தையும் அவர்கள் வியாபாரமாக்குவதையும் குறித்து வெளிப்படையாக அவர்களிடமே பேசுங்கள்!. நான்(டாக்டர்.புஷ்பராஜ்)கூறியதாக என் பெயரைகூட நீங்கள் அவர்களிடம் கூறுவதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றேன். அந்த குறிப்பிட்ட பிஷப்மார்களே அன்று அமெரிக்காவில் என்னிடம் அந்த ஊழியர்களைப்பற்றி பேசும்போது குறிப்பிட்ட அந்தஊழியர்கள் பொய்யர்கள் என்றார். ஆனால் அதே பிஷப்மார் தங்கள் வெளிநாட்டுஊழியம் முடித்து இந்தியா திரும்பியபின் அவர்களுக்கிடையே என்ன நடந்தது என்று தெரியவில்லை!.ஆனால் நான் ஒருமாதம் என் வெளிநாட்டு ஊழியம் முடித்து இந்தியா திரும்பியவுடன்,இவர்கள் பொய்யர்கள் என்று என்னிடம் கூறிய இந்த குறிப்பிட்ட பிஷப்மார் அந்த குறிப்பிட்ட பொய் ஊழியரின் கூட்டத்தில் கலந்துகொண்டு, மேடையில் அந்த ஊழியர்களின் பக்கத்தில் சாய்ந்தபடி அமர்ந்து போட்டோவுக்கு போஸ் கொடுத்த காட்சியை கண்டேன். அந்த ஊழியர்களின் பத்திரிக்கையின் வாயிலாக அந்த காட்சியை போட்டோவில் கண்டேன். இப்படிப்பட்ட பிஷப்மார்களா கள்ள ஊழியர்களிடமிருந்து நம் திருமண்டலத்தை! சபைகளை காப்பாற்ற போகிறார்கள்?. முடியாது! முடியவே முடியாது!.

ஒரு வழி உண்டு, என்னைப்போல் ஜாமக்காரன் பத்திரிக்கை வாயிலாக, பாண்டிசேரி சாம்சன் பால் அவர்களைப்போல் பத்திரிக்கை வழியாக மக்களுக்கு கள்ளஊழியர்களின் பொய் முகங்களை சுட்டிக்காட்டி அவர்களின் கள்ள உபதேசங்களை விளக்கி இவர்களின் புகைப்படங்களோடு இவர்களைப்பற்றி தைரியமாக மக்களுக்கு அறிவிக்கும் கிறிஸ்தவ பத்திரிக்கைகள் இன்னும் அதிகமாக பெருகவேண்டும். அதன் பலனாக வரக்கூடிய பிரச்சனைகள்,பண நஷ்டங்களை,அவமானங்களை,தாக்குதல்களை கர்த்தருக்காக தாங்கும் துணிவுஉள்ளவர்கள் பெருகவேண்டும். நாங்கள் இரண்டுபேர் நடத்தும் பத்திரிக்கை மூலமாக மட்டும் கோடிக்கணக்கான கிறிஸ்தவ மக்களுக்கு விழிப்புணர்வு உண்டாக்கமுடியாது! என்பது நிச்சயம்!. ஆகவே பிசாசு உபயோகித்த அதே மீடியாவான டிவியை நாமும் உபயோகித்து, பத்திரிக்கை மூலமாகவும், கன்வென்ஷன் கூட்டத்தில் பேசும்போதும் பகிரங்கமாக தங்கள் பிரசங்கத்தின் மூலமாக கள்ளஊழியாங்களைப்பற்றி விளக்கவேண்டும். மீடியாவை பயன்படுத்திதான் இப்படிப்பட்ட ஆபத்திலிருந்து மக்களை காப்பாற்றமுடியும். வேறு வழியில்லை!.

## கள்ளஉபதேசம்(CULT)



' கள்ளஉபதேசம்(CULT),பொய்ஊழியம் என்ற அட்டவணையில் சகோ.தினகரன்,பால்தினகரன்,மோகன்சி.லாசரஸ்,விக்டர்ஞானராஜ்,ஏஞ்சல் டிவி,சகோ.ஜட்சன்ஆபிரகாம்,சாதுசெல்வராஜ்,வின்சென்ட்செல்வகுமார், ஆசீர்வாதம்டிவி.ஆலன்பால்,ரூஹா.ஆல்வின்தாமஸ்,கார் ஸ்டீபன்,ஜவஹர் சாமுவேல்,எசேக்கியாபிரான்சிஸ்,சகோ.ஜான்சாலமோன் அவர்கள் ஆரம்ப காலத்தில் சகோ.தினகரன் அலுவலகத்தில் பணியாற்றிதைப்போல பாஸ்டர்.ராஜன்ஜான் அவர்களும் சகோ.தினகரன் அலுவலத்தில் பணியாற்றி ஏஞ்சல் டிவியில் வந்துசேர்ந்தார். அவரைப்பற்றியும்,புதிய எருசலேம் சபை

(தாராவி) மரித்த பாஸ்டர். N.லாசரஸ் அவர்களைப்பற்றியும், சகோ.ஆனந்தஸ்ரா ஆகியவர்களைப் பற்றியும் அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. **கேரளாவிலும்** மேலே குறிப்பிட்ட பல ஊழியர்களைப்போல் பல கள்ள ஊழியர்கள் பெருகிவிட்டார்கள். இவர்கள் எல்லாம் அந்த CULT **கள்ளஉபதேச ஊழியர்கள்** பட்டியலில் இருக்கிறார்கள். இந்த **ஆய்வுஅறிக்கை** சில வருடங்களுக்குமுன்னும், அதன்பிறகு 2009ம் வருடத்திலும் **வேதாகம கல்லூரி மாணவர்கள்** தயாரித்திருந்தார்கள்.



SAJITH

மேலும் **கேரளத்தில் கண்ணூர்** Bro.SAJITH JOSEPH என்பவர் செய்யும் ஊழியம் வேதவசனத்துக்கு விரோதமானது. இவர் சிறுபிள்ளைகளைகூட தவறான உபதேசத்தில் கொண்டுபோகிறார் என்ற குற்றசாட்டு எழுந்துள்ளது. Child Welfare Committee என்ற கேரளத்தில் உள்ள ஸ்தாபனம் இவருக்கு விரோதமான **குற்றச்சாட்டை காவல்துறைக்கு அனுப்பியுள்ளதாக** கூறுகிறார்கள். இதைப்போல் கேளராவில் முல்லைகரா என்ற டிவி ஊழியரின் கள்ளஉபதேசமும், **சென்னையில்** மிக வேகமாக பரவி வரும் **ஏசுவடியான் சில்வர்ஸ்டார்** என்ற டிவி ஊழியரின் சிரிக்க வைத்து வேடிக்கை பார்ப்பது, செழிப்பு உபதேச ஊழியமும்கொண்ட இவர்கள் பெயர் கள்ளஉபதேசகர்களின் பட்டியலில் இடம் பெற்றுள்ளது.



ஏசுவடியான்

## இவர்களின் தவறை சுட்டிக்காட்ட சிறந்த வழி:

சில வருடங்களுக்குமுன் ஒரு DVD கள்ள (CULT) ஊழியர்களைப்பற்றி பகிரங்கமாக வெளியிடப்பட்டது. அந்த DVD எல்லாருக்கும் இலவசமாக கொடுக்கப்பட்டது. அது 3 பாஷைகளில் Liveவாக கள்ள ஊழியர்களின் பிரசங்கம் ஆதாரத்தோடு வெளியானது.

பெங்களூரிலிருந்து A Mission Against AntiChrist என்ற பெயருள்ள ஆவிக்குரிய இயக்கம் DVD ஒன்றை வெளியிட்டு இந்தியாமுழுவதும் பலருக்கு இலவசமாக அந்த DVDஐ வெளியிட்டது. அதில் **வேதவசன மூலமாக எச்சரிப்பையும், கள்ள உபதேசம்**உள்ள ஊழியர்களையும், சகோ. தினகரன், பால் தினகரன், திருமதி. ஏஞ்சல்பால், திருமதி. ஸ்டெல்லாதினகரன், மோகன் சி. லாசரஸ், ஆனந்தஸ்ரா, பெங்களூரில் உள்ள ஐந்துவிரல்களில் மோதிரங்கள் அணியும் பாஸ்டர். பால்தங்கையா, சகோ. சாம்ஜெபதுரை போன்ற பலரின் கூட்டங்களை பிரசங்க ஒழுங்கினங்களையும் அப்படியே வீடியோ ஆதாரத்துடன் வெளியிட்டது. எனக்கும் சுமார் 30 DVDகளை அனுப்பியிருந்தார்கள். யார் அதை தயாரித்தது, யார் அதை எனக்கு From Address இல்லாமல் சாதாரண தபாலில் எனக்கு அனுப்பியது யார்? என்பதும் இதுநாள் வரை எனக்கு தெரியாது. ஆனால் இப்போது அந்த DVD வழியாக இன்னும் சில கள்ளஊழியர்களையும் அவர்கள் பேசிய வீடியோ செய்திகளை அதோடு இணைத்து எல்லாருக்கும் விழிப்புணர்வு உண்டாகும்படி அந்த DVDஐ இலவசமாகவே நாமும் தயாரித்து அனுப்பலாம்!. அதற்கு யாராவது முன்வந்தால், நாம் ஒன்றாககூடி அமர்ந்து, ஜெபித்து, திட்டமிட்டு இன்னும் நல்ல நவீனமுறையில் துண்டுபிரதியை விநியோகிப்பது போல அப்படிப்பட்ட DVDகளை விநியோகிக்கலாமே!.

நான் குறிப்பிட்ட அந்த DVDஐ பெற்றுக்கொள்ள விரும்புவோர் தொடர்புக்கொள்ளவேண்டிய விலாசம்:

**WARNING**
**A MISSION AGAINST ANTICHRIST**
**154,CTO COLONY,**
**PO BOX.25913,**
**KAGADESHPURA, BANGALURU.**

இன்டர்நெட் வழியாக இவர்களோடு தொடர்புக்கொள்ள :CRUSADERS-ORG என்பதில் காணலாம்.

**இவர்கள் வசனத்தைமட்டும் சுட்டிக்காட்டி தமிழ்,ஆங்கிலம் இன்னும் பல பாஷைகளில் அந்த DVDயில் கள்ள உபதேசத்தைப்பற்றி அறிவிக்கிறார்கள். ஆனால் அந்த DVDயில் காட்டப்படும் ஊழியர்கள் எந்தெந்த விதத்தில் வசனத்தைவிட்டு விலகி கள்ள உபதேசத்தின்மூலம் மக்களை கெடுக்கிறார்கள் என்பதை விளக்கவில்லை. ஆனால் நாம் அந்த ஊழியர்களின் தவறுகளை தெளிவாக ஆதாரத்துடன் விளக்கலாம். அப்போதுதான் கிறிஸ்தவ மக்கள் கிறிஸ்தவ தலைவர்கள் உண்மையை விளங்கிக்கொள்ளமுடியும். இது விஷயமாக பாரம்உள்ளவர்கள் என்னோடு கடிதம்மூலம் தொடர்புக்கொள்ளலாம். தேவையானவர்கள் அந்த DVDஐ என்னிடம் கேட்டு பெற்றுக்கொண்டு அதன் காப்பி நீங்களே எடுத்து, இப்போதுள்ள புதிய கள்ளஊழியர்களின் தவறான உபதேசத்தையம் Liveவாக அதோடு இணைத்து துண்டுப்பிரதி வெளியிடுவதுபோல் வெளியிடுங்கள்.**

## மற்றொரு வழி:

**இப்போது சில Youtubeகளில் பல தவறான ஊழியர்களைப்பற்றி அப்படியே Liveவாக விவரங்கள் வெளியிடுகிறார்கள். கம்பியூட்டரில் Google சென்று பார்த்தால் இப்படி இந்த ஊழியர்கள் துணிகரமாக தேவநாமத்தை தூஷிக்கிறார்களே என்று ஆச்சரியப்படுவீர்கள்!. விதவிதமான பொய்யான அந்நிய பாஷைகளை அதில் நீங்கள் பார்க்கலாம். இவர்கள் ஆவியில்நிறைந்து பன்றிஉறுமுவதுபோல சத்தமிடுவது, அடிவயிற்றை பிடித்துக்கொண்டு சிரிப்பது, துள்ளுவது, பெண்களும், ஆண்களும் கட்டிப்பிடித்து ஆவியில் நிறைந்து சிரித்துக்கொண்டு அந்நியபாஷை பேசுவது, இவையெல்லாம் எந்தெந்த Youtube ல் காணலாம் என்பதை எனக்கு குறிப்பிட தெரியவில்லை. யாராவது அவைகளை குறிப்பிட்டு எழுதினால் ஜாமக்காரனில் அதை வெளியிடுவேன். நான் இரண்டு Youtube நிகழ்ச்சிகளை மட்டுமே நான் கண்டேன்.**

**(மேலே குறிப்பிட்ட கள்ள ஊழியர்களைப்பற்றி எழுத தொடங்கும்போது கீழ்காணும் செய்திகளையும் அறிவிக்க பலர் என்னை கட்டாயப்படுத்தினார்கள். ஆகவே திருநெல்வேலியில் உள்ள ஜாமக்காரன் வாசக பெண்களின் வேண்டுகோளின்படி இந்த செய்தியை வெளியிடுகிறேன்).**

# பெண்கள் மகாநாடு:

**குறிப்பாக எந்த கன்வென்ஷனையும், யார் நடத்தினாலும், கன்வென்ஷனில் பிரசங்கிப்பவரைப்பற்றி நன்று அறிந்த பின்னரே அவர்களை பிரசங்கிக்க அழைக்கவேண்டும். சாட்சிஇழந்த ஒரு நபரை கன்வென்ஷனுக்கு அழைத்தால் அந்த நபரின் பாவச்செயலை பிரசங்கம் கேட்கும் மக்கள் பின்பற்றி அந்த பிரசங்கியைப்போலவே தங்களின் சாட்சியையும் இழந்துபோவார்கள். அந்த குறிப்பிட்ட பிரசங்கிமார் களின் பாவத்தை இவர்களும் செய்யநேருமே! ஆனால் இதைக்குறித்து பிரசங்க ஏற்பாடு செய்பவர்கள் கவலைப்படுவதாக இல்லை. அதற்காகவே கீழே வாசிக்கும் இந்த குறிப்பிட்ட நிகழ்ச்சியை நான் சுட்டிக்காட்டுகிறேன்.**

**‘ நெல்லை திருமண்டலத்திலும், திருவள்ளூர் என்ற இடத்திலுள்ள சபையிலும் பெண்கள் மகாநாட்டுக்கு விசேஷசெய்தியாளராக யாரை அழைத்தார்கள் தெரியுமா? 3 கணவர்மார்களுடன் வாழ்க்கை நடத்திய ஒரு பெண் பிஷப்பும், பிஷப் கமிஷனரியுமான ஒரு பெண்ணை பிரசங்கம் செய்ய அழைத்து உள்ளார்கள். அந்த பெண்ணின் புகைப்படத்தை மிக பெரியதாக பிரசூரித்து பேனர்கள் கட்டி விளம்பரம் செய்தனர். அந்த பெண்ணுக்கு பெரிய விளம்பரம், பெரிய வரவேற்பு கொடுத்து பேச வைத்தார்கள்.**

**‘ ஒரு பெண் கணவன் உயிரோடு இருக்க பலரை திருமணம் செய்துகொள்ளவோ, திருமணம் செய்யாமல் ஒரு ஆணுடன் சேர்ந்து வாழ்ந்து குடும்பம் நடத்தவோ பெற்றோராகிய நீங்கள் சம்மதிப்பீர்களா? என்று தங்கள் பெற்றோரிடம் அல்லது கூட்டம் நடத்தினவர்களுடன் கூட்டத்தில் கலந்துக்கொண்ட**

யாராவது ஒருவர் கேள்விகேட்டால் பெற்றோர் என்ன பதில் சொல்வார்கள்? அல்லது கூட்டம் நடத்தியவர்கள் என்ன பதில் சொல்வார்கள்?. அந்த பிள்ளைகளைப்பெற்ற பெற்றோர் அந்த மாநாட்டில் பேசிய அந்த பெண் இரண்டுமுறை திருமணம் செய்து விவாகரத்து செய்தவர் ஆகும். மேலும் விவாகம் செய்யாமலும் ஒருவருடன் சேர்ந்து வாழ்ந்து குடும்பம் நடத்திய ஒருவராகும். கணவர்கள் எல்லாரும் உயிரோடு இருக்கும்போதே இன்னொரு பையனை என் மகளுக்கு CSI ஆலயத்தில் திருமணம் செய்துவைக்க அந்த திருமண்டல CSI **ஆயர்** அல்லது **பிஷப்** அனுமதிப்பாரா? இப்படி அந்த மாநாட்டில் கலந்துக்கொண்ட அந்த குறிப்பிட்ட திருமண்டல பெண்கள் கூட்டம் நடத்தியவர்களைப்பார்த்து இப்படிப்பட்ட கேள்வியை கேட்டால் **பிஷப்பும்,பிஷப் மனைவியும்,ஆயர்களும்** என்ன பதில் கூறுவார்கள்?.

‘ ஒரு கூட்டத்துக்கு ஒரு**பிஷப்** தலைமை தாங்கினாலே அந்த கூட்டத்தில் பேசும் நபரை, அல்லது பெண்ஊழியரை தான் **அங்கீகரிப்பதாகத்தானே அர்த்தம்?** கணவன் உயிரோடு இருக்கும்போதே ஒரு பெண் மறுபடியும் ஒரு நபரை சரியான காரணமோ,நியாயமோ இல்லாமல் திருமணம் செய்தால் அவளை **விபச்சாரி** என்றுதான் நம் வேதம் அழைக்கிறது. இப்படிப்பட்ட **சாட்சியில்லா பெண்களை** மாநாட்டில்பேச அழைத்து நம் திருமண்டல பெண்களின் உள்ளத்தில் **தவறான எண்ணத்தை** உருவாக்க கூட்ட ஏற்பாடு செய்த இவர்களுக்கு எப்படி தைரியம் வந்தது?. திருமண்டலம் முழுவதையும் அல்லது இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களையும் கர்த்தர் எப்படி சகிப்பார்?. இடறல்கள் யாரால் வருகிறதோ? **அவர்களுக்கு ஐயோ!** என்று வேதம் தெளிவாக கூறவில்லையா?

இப்படி நான் எழுதிய இந்த குறிப்பிட்ட செய்தியை பொய்யானசெய்தி என்று **நெல்லை** திருமண்டல மக்கள் யாராவது கூறுவார்களா? பிஷப் அல்லது பிஷப் மனைவி அவர்களாவது கூறுவார்களா?. உயிரோடு இருக்கும் இரண்டு கணவர்களின் புகைப்படங்களை அவர்கள்தன் மனைவியுடன்(மாநாட்டில் பிரசங்கித்த அந்த பெண்ணோடு)இருப்பதை நான் ஜாமக்காரனில் வெளியிட்டாலாவது நம்புவார்களா?.

‘ நம் இளைய சமுதாயத்தை,நம் குடும்பத்தில் பிறந்த வாலிபபெண்களை தயவுசெய்து காப்பாற்றுங்கள். இப்போதே திருநெல்வேலி திருமண்டலத்தில் **விவாகரத்தின் எண்ணிக்கை** மிகமிக அதிகமாக பெருகிக்கொண்டுபோகும் இந்த நிலையில் பலமுறை திருமணம் செய்த இப்படிப்பட்ட பெண்களை மகாநாட்டுக்கு பிரசங்கிக்க அழைக்கலாமா? சாட்சியில்லாத ஊழியக்கார பெண்களை அழைத்து அவர்களின் தவறான வாழ்க்கையை நம் திருமண்டல பெண்பிள்ளைகள் பின்பற்றி கெட்டுப்போக பிசாசு இப்படிப்பட்ட பெண்கள் மாநாட்டை பயன்படுத்திவிட்டானே!. இதற்கு உடன்பட்ட பிஷப் முதல் அவர் மனைவி, பொருப்பாளர்கள் கண்டிப்பாக கர்த்தருக்குமுன் கணக்கு கொடுத்தாகவேண்டும். இப்படி நான் எழுதியபின் பிஷப்போ,திருமண்டல ஆயர்களோ,திருமண்டல பொருப்பாளர்களோ என்னை நேசிப்பார்களா? வெறுப்பார்களா?.

‘ யாரையும் அவமானப்படுத்துவது என் எழுத்தின் நோக்கமல்ல! என்பதையும் தயவுசெய்து விளங்கிக்கொள்ளுங்கள். **பரிசுத்தம்** அதுதான் நம் தெய்வத்தின் லட்சணம். நம்மையும் அவர்போல மாறவேண்டும் என்பதுதான் அவர் விருப்பமும்,எதிர்பார்ப்புமாகும். நடந்துமுடிந்த இப்படிப்பட்ட கூட்டங்களில் எப்படியோ மறைமுகமாக விஷம் கலக்கப்பட்டுவிட்டது. அதை பருகிய அக்கூட்டத்தில் கலந்துகொண்ட பெண்களின் உள்ளத்திலிருந்து அந்த விஷத்தை எப்படி எடுக்கபோகிறார்களோ?.

‘ **எழுதி அறிவிக்கவேண்டியதும்,எச்சரிக்கவேண்டியதுமே என் ஊழியம்**,எழுதிவிட்டேன் என் கடமை முடிந்தது. திருமண்டலத்தில் பல பெண்கள் கேட்டுக்கொண்டதாலேயே இதை எழுதினேன். இதனால் எனக்கு ஏற்படும் பாதிப்புகளையும், ஆபத்துகளையும் பற்றி கவலைப்படாமல் திருமண்டல மக்களின் ஆவிக்குரிய நன்மைக்காக மட்டுமே இதை எழுதினேன். பிறகு உங்கள் விருப்பம்!. திருமண்டல ஆயர்கள்,மக்கள்,குறிப்பாக பெண்கள் ஐக்கியசங்க பொருப்பாளர்கள் யாவரும் உபவாசித்து நடந்த தவறுக்கு கர்த்தரிடம் மன்னிப்புகேட்டு தேவதண்டனையிலிருந்து தப்பிக்க வழி காணுங்கள். ஒரு ஆகான்

மூலம் இஸ்ரவேல் பாளையம் முழுவதற்கும் ஏற்பட்ட தண்டனை நெல்லை திருமண்டல மக்களுக்கு வரவேண்டாம். உபவாசித்து நடந்த தவறுக்கு கர்த்தரிடம் அழுது மன்னிப்பு கேளுங்கள். நம் கர்த்தர் நல்லவர்.

‘ இனியாவது திருமண்டல மக்கள் **வசனத்தில் நடத்தப்பட**, வசனம் இப்படி கூறுகிறது என்று சுட்டிக்காட்டுபவர்களை பிரசங்கிக்க அழையுங்கள். **கர்த்தர் என்னிடம்** கூறினார், பரலோகம் போய் வந்தேன், **நரகத்துக்குபோய்வந்தேன், கர்த்தர் ஜெபத்தில் தனக்கு இத்தனை** பெயர்களை காட்டினார் என்று கூறும் பிரசங்கிமார்களை அழைத்து சபைமக்களை வசனத்திலிருந்து பிரித்துவிடாதீர்கள். பொறாமையின் அடிப்படையில் யாரையும் மனதில்நினைத்துக்கொண்டுஇதைஎழுதுவதாக எண்ணவேண்டாம்.

திருநெல்வேலி திருமண்டலமக்கள் **வேதம்அறிந்த பரம்பரையில் வளர்ந்தவர்கள்.** நான் எழுதியதை வேத வசனத்தோடு ஒப்பிட்டு பார்த்து, ஊழியர்களை எடைபோட்டு, பரிசோத்திக்கும் பகுத்தறியும் ஞானத்தை ஆண்டவரிடம் கேட்டு ஊழியர்களை தெரிந்தெடுங்கள்.

வேதத்தில் உள்ள தீர்க்கதரிசிகளை யாவரையும் கர்த்தர் மக்களை **எச்சரிக்கவும்** அவர்களை உணர்த்தவும்தான் கர்த்தர் ஊழியர்களை உபயோகித்தார். **ஆறுதல்கூற** அல்ல! மறுபடியும் கூறுகிறேன். மக்களுக்கு **ஆறுதல்கூற** எந்த தீர்க்கதரிசியையும் கர்த்தர் உபயோகிக்கவில்லை!. இதை விளங்கிக் கொண்டு யாவரும் வேதவசனத்துக்கு திரும்புவோம்.

‘ கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய திருமண்டலங்கள் யாவும் தேவனால் விசேஷமாக ஆசீர்வதிக்கப்பட்டதாகும். அதனால்தான் படிப்பிலே, பதவியிலே, வியாபாரத்திலே, மிஷனரி ஊழியத்திலே உன்னதஇடத்தில் கர்த்தர் இங்குள்ள குடும்பங்களை வைத்துள்ளார். அதன் ஆசீர்வாதத்தை இழந்துவிடவேண்டாம். அந்த ஆசீர்வாதங்கள் நம் சந்ததியை தொடர்ந்து வரவேண்டும். வேதத்தில் **இக்கபோத்** என்ற பதத்துக்கான அர்த்தத்தை ஆராய்ந்துபாருங்கள். அந்தநிலை உங்கள் யாருக்கும் வந்துவிடவேண்டாம்.

‘ **திருநெல்வேலி** திருமண்டலத்தில் என் **ஊழிய கதவுகளை** நானே என்னுடைய இந்த எழுத்துமூலம் பூட்டிக்கொள்கிறேன். என்னை புரிந்துக்கொண்டவர்கள்மட்டும் என்னோடு ஜெபத்தில் தரித்திருங்கள். சபை தேவனின் சரீரம். அதை வேதனை படுத்தினதுபோதும். ஒருமுறை அவர் பட்ட பாடும், அவர் அனுபவித்த சிலுவை வேதனையும் போதும்!. நம் தவறான செய்கையால் வழிநடத்துதலால் அவரை திரும்பதிரும்ப சிலுவையில் அறைந்து மீண்டும் வேதனைப்படுத்தவேண்டாம். ஜாக்கிறதை!.

‘ இந்த ஜாமக்காரனில் ஆசிரியர் குறிப்புரை மிக நீண்டுபோனது.

‘ **ஆன்-லைனில்** காணிக்கை அனுப்பகிறவர்கள் தயவுசெய்து உங்கள் **விலாசம், தொலைபேசி** எண் ஆகியவைகளை ஒவ்வொரு முறையும் எனக்கு எழுதி அனுப்புங்கள். எந்த பேங்கில் எவ்வளவு அனுப்பினீர்கள் என்பதையும் குறிப்பிட்டு எழுதுங்கள்.

‘ மணியாடர், இ-மெயில், ஆன்-லைன் மூலமாக காணிக்கை அனுப்பிய யாவருக்கும் என்னுடைய வாழ்த்துதல்களையும், நன்றியையும் அறிவிக்கிறேன்.

‘ 2015 ஜீன் மாதம் நம்முடைய பிள்ளைகளுக்கு பள்ளிகள் தொடங்குவதால் தினமும் அவர்களுக்காக ஜெபிக்கவும். 10 மற்றும் 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பிள்ளைகள் நல்ல பாட பிரிவில் சேர கர்த்தரின் ஆலோசனை பெற்று சேர்க்கவும். தொடர்ந்து ஜாமக்காரன் வாசகர்கள் குடும்பத்தினர் அனைவருக்காவும் ஜெபிக்கிறேன்.

கர்த்தரின் உன்னத பணியில்

**✍ டாக்டர். புஷ்பராஜ்**

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# பணம் முடிவு செய்கிறது

இந்திய நாட்டில் பல விஷயத்தில் பணம் முடிவு செய்கிறது. கிறிஸ்தவ ஸ்தாபனங்கள், ஊழியங்கள்,சபை ஆலயம் கட்டுவது யாவற்றிக்கும் லஞ்சம் கொடுக்காமல் நூற்றுக்கு நூறு உண்மையான விசுவாசியாக வாழவேண்டும் என்று எவ்வளவு உறுதியாக இருந்தாலும் பணம்,லஞ்சம் என்ற பெயரில் இல்லாமல் வேறு பெயரில் அந்த லஞ்சபணத்தை கொடுத்தால் மட்டுமே காரியங்கள் சீக்கிரம் நடக்கிறது. சில உண்மை ஸ்தாபனங்கள்கூட நிலம் வாங்கும்போது கட்டிடம் வாங்கும்போது நாங்கள் ஒரு பைசா லஞ்சம்கொடுக்காமல் வெற்றிகரமாக முடித்துவிட்டோம் என்று கூறினாலும் கொஞ்சம் யோசித்தால் அவர்கள் கொடுத்த பணத்தின் தொகையில் ஒரு பகுதி லஞ்சமாக எடுக்கப்பட்டிருப்பதை அறியலாம்.

## லஞ்சத்துக்கு பல பெயர்களுண்டு:

இத்தனை காலம் என் ஊழியத்தில் லஞ்சம் கொடுக்கக்கூடாது என்று நான் தீர்மானித்து அதன்படியே செயல்பட்டேன். ஒருமுறை 1966ம் ஆண்டு என்று நினைக்கிறேன். அவசரமாக மெட்ராஸ்(சென்னை) செல்ல வேண்டி வந்தது. ரிசர்வேஷன் முடிந்துவிட்டது. கள்ளமார்க்கெட்டில் ஸ்லீப்பர் டிக்கட் வாங்கி கொடுப்பதாக என்னிடம் வைத்தியம் செய்துகொண்ட ஒரு நபர் கூறினார். நீங்கள் ரயில், புறப்படும் நேரத்தில் வந்தால்போதும் என்று கூறினார். இரவு ரயில் பிளாட்பாரத்தில் வந்து நிற்கிறது. அந்த கடைசிநேரத்தில் ஒருவன் ஓடிவந்து என்னிடம் டிக்கட் கொடுத்து(அந்த நாட்களில் **அட்டை டிக்கட்** நடைமுறையில் இருந்தது) அதன்பின்புறம் பெயர்,வயது, எழுதியிருக்கும் என்னிடம் டிக்கட் கொடுத்த நபர், சார் டிக்கட் விலையைவிட 40 ரூபாய் அதிகம் கொடுங்கள் என்றார். நானும் கொடுத்துவிட்டேன். உடனே அவன் சொன்னான் சார் உங்கள்பேர் **முருகேசன்** உங்கள் வயது 49 மறந்துவிடாதீர்கள். டிக்கட் பரிசோதகர் உங்களிடம் கேட்டால் இப்படித்தான் கூறவேண்டும் என்று கூறி ஓடிவிட்டான்.

கோச் கண்டுபிடித்து **அப்பர்பெர்த்** மேல்படுக்கையில் டிக்கட்டில் குறிப்பிட்ட நெம்பரின்படி ஏறி படுத்துக்கொண்டு பேப்பர் வாசித்துக்கொண்டிருந்தேன். ரயில் போய்க்கொண்டிருந்தது. டிக்கட் பரிசோதகர் வந்தார், ஒவ்வொருவரின் டிக்கட் வாங்கி தன் சார்ட்டில் உள்ள பெயரோடு ஒப்பிட்டு பார்த்துக்கொண்டு வந்தார். நான் அவரை கவனிக்கவில்லை. **முருகேசன் யார்**? என்று சத்தமாக கேட்டார். அப்போதும் நான் கவனிக்கவில்லை. படுக்கை எண் குறிப்பிட்டு மறுபடியும் சத்தமான கூப்பிட்டார். அப்போதுதான் கீழே குனிந்து பார்த்தேன். மற்ற பயணிகளுடன் டிக்கட் பரிசோதகரும் என்னையே பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போதுதான் என் கள்ள டிக்கட்டுக்கு உரியவரின் பெயர் **முருகேசன்** என்று பிளாட்பாரத்தில் கூறப்பட்டதை உணர்ந்தேன். ஒன்றும் பேசாமல் டிக்கட்டை எடுத்து கொடுத்தேன். வாங்கி கையொழுத்து போட்டுவிட்டு நல்ல வேளையாக கேள்விஒன்றும் கேட்காமல் அவர் போய்விட்டார். ஆனால் அங்கு உட்கார்ந்திருந்த ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவர், எனக்கு அறிமுகமான டாக்டர் ஒருவர்ஆக அந்த இருவரும் என்னை பார்த்துக்கொண்டிருந்தனர். அந்த பார்வையில் பல அர்த்தங்கள் இருந்தன.

என்னையும், என் பெயரையும் ஏற்கனவே அவர்கள் அறிந்திருந்ததால் நான் வெட்கத்தால் கூனி குருகிப்போனேன். அவர்கள் நீங்களா முருகேசன், நீங்கள் டாக்டர்.புஷ்பராஜ் அல்லவா?

என்று அவர்கள் யாரும் என்னைப்பார்த்து கேட்கவில்லை. ஆனால் அன்று அவர்கள் பார்த்த மௌன பார்வை அந்த கேள்வியை என்னிடம் கேட்டது என்று உணர்ந்து வெட்கப்பட்டேன். நான் பிளாக்கில் டிக்கட் வாங்கி வந்திருக்கிறேன் என்பதை அவர்கள் நன்றாக அறிந்திருப்பார்கள். அன்று இரவு முழுவதும் எனக்கு சரியான உறக்கம் இல்லை.

என்னை அவர்கள் என்ன நினைத்திருப்பார்கள்? நல்லவேளை அங்கு கிறிஸ்தவர்கள் யாரும் இல்லை. பிரசங்கம் செய்யும் டாக்டரா பிளாக்கில் டிக்கட் வாங்கி பயணிக்கிறார் என்று நிச்சயம் நினைத்திருப்பார்கள். அந்த சம்பவத்தை என்னால் இன்றும் மறக்க இயலவில்லை. அன்றிலிருந்து இன்றுவரை பிளாக்கில் டிக்கட் வாங்கி ஸ்லீப்பரில் பயணம் செய்வதில்லை.

' அதே மாதிரியான மற்றொரு அனுபவம் சமீபத்தில் 2015 ஜனவரி மாதம் எனக்கு ஏற்பட்டது. அது பிளாக் டிக்கட் அனுபவம் இல்லை. ஆனால் லஞ்சம் கொடுத்த அனுபவமாகும்.

ஜாமக்காரன் பத்திரிக்கையை இதுவரை அச்சிட்ட **அச்சகத்தை** மாற்றி வேறு ஒரு புதிய அச்சகத்துக்கு மாற்ற கலெக்டரின் உரிமம் பெறவேண்டும். அதற்கான விண்ணப்பம் படிவம் பூர்த்தி செய்து அச்சக உரிமையாளரின் சம்மத கடிதத்தையும் இணைத்து(டிக்ளரேஷனுக்காக) கலெக்டரின் அனுமதிக்காக விண்ணப்பித்திருந்தேன். அந்த விண்ணப்பத்தை கலெக்டர் அலுவலகத்திலிருந்து தாசில்தார் அலுவலகத்துக்கு அனுப்பி அச்சகத்தைப்பற்றிய உண்மை விவரம் அறிய என் விண்ணப்ப படிவத்தை அனுப்பிவைத்தார்கள். 2013ம் ஆண்டு நவம்பர் மாதம் தாசில்தாரின் விசாரணைக்கு அனுப்பப்பட்டது. பதில் ஏதும் எனக்கு வரவில்லை. பல மாதங்களாகியும் அனுப்பிய பேப்பர் மீது எந்த நடவடிக்கையும் தாசில்தார் எடுக்கவில்லை. சுமார் 13 முறை தாசில்தார் அலுவலகம் சென்று விசாரித்தேன். இரண்டு நாட்களில் பதில் வரும் என்பார்கள். இப்படியே சுமார் இரண்டு வருடம் நீண்டது. அப்போதுதான் அங்குள்ள பியூன் கூறினார். சார் நீங்கள் வந்தால் வேலையாகாது நீங்கள் டாக்டர் என்பதால் யாரும் உங்களிடம பணம் கேட்க பயப்படுகிறார்கள். ஆகவே வேறு நபரை அனுப்புங்கள் என்றார். அவர் கூறியபடி வேறு ஒரு நபரை அனுப்பினேன். ராணுவ வீரர்கள் நினைவுக்காக **இந்திய நாட்டு கொடி** விற்பனை செய்து பணம் வசூலிக்கிறார்கள். அதற்கு 3000ரூபாய் பணம் கேட்கிறார்கள் என்று அவன் கூறினான். வேறு வழியில்லாமல் கொடுத்தேன். சுமார் இரண்டுவருடம் நகராமல் கிடந்த என் விண்ணப்ப பாரம் ஒரு வழியாக பரிசோதித்து தாசில்தார் கையொப்பம்பெற்று கலெக்டர் அலுவலகம் அனுப்பினர். அங்கும் பணம் முதலைகள் இருந்தார்கள். அவர்கள் டேபிளிலிருந்து கலெக்டர் டேபிளுக்கு விண்ணப்ப பாரம் போய் சேரவில்லை. நல்லவேளை ஒரு நல்ல கிறிஸ்தவர் DRO பதவியில் இருந்தார் என் விவரம் அறிந்து உடனே நடவடிக்கை எடுத்து உதவி கலெக்டர் முதல் தலைமை அலுவலர் வரை தன் அறைக்கு அழைத்து என் முன்பாகவே அவர்களை ஒரு பிடிபிடித்தார். டாக்டரின் விண்ணபத்தை விசாரிக்க ஏன் இரண்டு வருடமானது என்று அவர்களை கண்டித்து ஒருநாள் என்னை அவரே தொலைபேசியில் அழைத்து மாலை 4 மணிக்கு நேரில் வரகேட்டுக்கொண்டார். 4 மணிக்கு அலுவலர் அதிகாரிகள் அத்தனை பேர்கள் நிற்க என்னை உட்கார வைத்து DRO எழுந்து நின்று இவர்களின் தாமத நடவடிக்கையின் தவறுக்கு உங்களிடம் நான் மன்னிப்புக்கேட்டுக்கொள்கிறேன். உங்களை அலைய வைத்ததற்கு பொருத்துக் கொள்ளுங்கள். ஒரு சிலரால் இப்படிப்பட்ட தவறுகள் நடப்பதை எங்களாலும் தடுக்க இயலாது என்று கூறி அதிகாரிகளை அனுப்பிவிட்டு தனக்காக ஜெபிக்கும்படி கை கூப்பி நின்றார். ஜெபித்தேன். உயர் அதிகார பதவியில்உள்ள இப்படிப்பட்ட சிலரால் அப்பாவி மக்களுக்கு எத்தனை நன்மைகள் நடக்கிறது. அதிகாரிகளுக்காக நாம் ஜெபிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

1 தீமோ 2:1-3. என் பத்திரிக்கையின் விஷயமாக இந்த அனுவபத்தில் நான் கொடுத்த 3000 ரூபாய்க்கு **லஞ்சம் என்ற பெயர் இல்லை,கொடிநாள் நிதி** என்ற பெயர் வைத்து என்னிடமிருந்து அந்த பணத்தை வாங்கினார்கள்.**கொடி பணம்** என்று அந்த லஞ்சத்துக்கு பெயர் வைத்து என்னை நான் நியாயப்படுத்திக்கொண்டேன். நான் லஞ்சம் கொடுக்கவில்லை என்று நானே என்னை தேற்றிக்கொண்டேன்.

' நம் CSI,லுத்தரன் சபைகளிலும்,காணிக்கை முழுவதையும் அஸஸ்மென்ட் என்ற பெயரில் டையோசிஸ்க்கு அனுப்பவேண்டும். ஆனால் காணிக்கையின் முழு தொகையையும் தலைமைக்கு எந்த சபையும் அனுப்புவதில்லை. ஒரு பெரும் தொகையை மறைத்து அதை கணக்கில் வரவு வைக்காமல் மீதி தொகையின் கணக்கைமட்டுமே திருமண்டல தலைமைக்கு அனுப்புவார்கள். இதனாலேயே இரட்சிக்கப்பட்ட பலர் சபையில் பொருளாளர் பொருப்பை தெரிந்தெடுப்பதில்லை.

புதிய ஆலயம் கட்டவேண்டுமானால் நிலம் ரிஜிஸ்டர் செய்யும் இடத்தில்,கட்டிட உரிமை வாங்கும் இடத்தில் ஒரு பெரும்தொகை கொடுக்காமல் கட்டிடம் எழும்பாது.

கேரளாவில் மத்திய கேரளா CSI டையோசிஸ்ஸில் இப்போதுள்ள பிஷப்பும்,டெப்டி மாடரேட்டருமான பிஷப் அவர்கள் DC கவுன்சில் கூட்டத்தில் நான் ஒருவன்தான் மாடரேட்டருக்கு லஞ்ச பணம் கொடுக்காமல் பிஷப்பாக தெரிந்தெடுக்கப்பட்டேன் என்றார். உடனே பிஷப்புக்கு எதிரானவர்கள் நோட்டீஸ் அச்சடித்து விநியோகித்தார்கள். பிஷப் கூறியது பொய். ஆத்மீக யாத்திரை ஸ்தாபன பிஷப் **கே.பி.யோகன்னன்** அவர்கள் மாடரேட்டருக்கு லஞ்சம் கொடுத்ததை ஆதாரத்துடன் குறிப்பிட்டனர். பிஷப் கூறியது உண்மை. பிஷப் பெயரில் மற்றவர் லஞ்சம் கொடுத்துதான் பிஷப்பாக பதவி கிடைத்தது. இது உண்மைபோல உள்ள பொய் அறிவிப்பாகும்.

## பணம் முடிவு செய்கிறது என்பது உண்மையாகிறது:

வடஇந்தியாவில் பிரபல நடிகர் சல்மான்கான் என்பவர் அதிகமான மதுபானம் குடித்துவிட்டு இரவில் ரோட்டின் ஓரத்தில் வரிசையாக படுத்து உறங்கிக்கொண்டிருந்தவர்களின் கால்களில் தன் காரை ஏற்றி அதனால் சிலர் மரித்தும்போனார்கள். பலருடைய கால்கள் உடைந்து அகற்றப்பட்டது. சல்மான்கான் கைது செய்யப்பட்டார். கொலை குற்றம், குடிப்போதையில் கார் ஓட்டியது, இப்படி பல குற்றச்சாட்டுகள் அவர்மேல் சுமத்தப்பட்டது. தனது மெய் காவலரை பல லட்சங்கள் பணம் கொடுத்து காரை மெய்காப்பாளர் தான் ஓட்டியதாக கூறவைத்தார்கள். ஆனால் அவர் காசநோயால் இறந்துப்போனதாக தகவல் வந்தது. வழக்கை ஒன்றுமில்லாதாக்க நடிகர் விஷயத்தில் போலீசும் உதவியது. சல்மான்கான் சம்பந்தப்பட்ட பைல் கோப்புகள் தீயில் எரிந்துவிட்டதாக அறிவிக்கப் பட்டது. சுமார் 10 வருடங்கள் தீர்ப்பு கூறாமல் வழக்கு நீண்டது. பணம் கொலைக்காரனையும் கொலை செய்யவில்லை என்று கூறவைக்கும்.

வருமானத்துக்குமேல் பல கோடிகள் சொத்து சேர்த்து கைது செய்யப்பட்டு தீர்ப்பு வந்த பின்னும் கோடிகள் அடங்கியபெட்டிகள் கைமாற எதிர்அணி வக்கீல்களை கூட விலைக்கு வாங்கி,பல நீதிபதிகளையும் விலைக்க வாங்கமுடியும் என்று பல சம்பவங்ள் நம் கண்முன் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. இந்த பணவிளையாட்டு நீதிமன்றங்களில் மட்டுமல்ல, கிறிஸ்தவ திருமண்டலங்களில் தகுதியற்றவர்களை வேலையில் அமர்த்த தகுதி உள்ளவர்களை இடம்மாற்றம் செய்ய பணம் விளையாடுகிறது. அவைகளை பிஷப்மார்களே பொருப்புடன் செய்து பணகொடுத்தவர்களுக்குஉதவிசெய்துஏழைமக்களைவெகுதூாரம்இடமாற்றம் செய்துவிடுகின்றனர்.

' சமீபத்தில் கம்பியூட்டர் டிவிட்டரில் BJP அரசாங்கத்தின் கடந்த ஒருவருட ஆட்சிக்கு எவ்வளவு மதிப்பெண் கொடுப்பீர்கள் என்று கேள்விகேட்க அதற்கு 0 மார்க்தான் கொடுப்பேன் என்று பதில் எழுதியபோது

= அதை வாசித்த சிலர் தங்கள் பேஸ்புக்கில்(கம்பியூட்டர்) இது **பெங்களுர் குமாரசாமி கணக்குபோல** அல்லவா இருக்கிறது என்று எழுதியிருக்கிறார்கள். குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவரை விடுவிக்க எத்தனை மார்க் குறைத்துபோட்டால் ஒருவரை பெயிலாக்க முடியும் என்று சில ஆசிரியர் கணக்கிடுவதுபோல குற்றவாளி அல்ல என்று கூற எவ்வளவு மார்க் போடவேண்டுமோ அதை போட்டு பாஸ் என்று அறிவிக்க பணம் விளையாடிருக்குமோ என்கிறார்கள்.

**கிறிஸ்து இல்லாத இடத்திலும் பண ஊழல்**
**கிறிஸ்து பெயரிலும் பண ஊழல்**
குற்றம் புரிந்தவனும் தனக்கு நியாயம் கேட்கிறான்
குற்றத்திற்கு ஆட்பட்டவனும் தனக்கு நியாயம் கேட்கிறான்.

யாருக்கு நியாயம் வழங்குவது என்பதை **பணம்தான் முடிவு செய்கிறது** என்று **கவிஞர்.கண்ணதாசன்** எழுதி முடிக்கிறார். எத்தனை உண்மை. இனி வரப்போகும் காலம் எப்படியிருக்குமோ?.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# கன்னியாகுமரி CSI டையோசிஸ்

## மெதுகும்மல்(ST மங்காடு) CSI சபை நாள் கன்வென்ஷன்






**மெதுகும்மல் இது சிறு கிராம சபையாகும். இங்கு நடந்த நான்கு நாள் கன்வென்ஷன் மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது. Rev.E.ஜோசப் டால்வின் அவர்கள் கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தார். Rev.R.ஜான், Rev.D.மத்தியாஸ், Rev.Dr.J.W.பிரகாஷ் (South Kerala CSI Diocese)ஆகியவர்கள் கூட்டங்களை சிறப்பித்தார்கள். நான் நான்கு நாட்களும் கர்த்தரின் செய்தியை பகிர்ந்துக்கொண்டேன். கர்த்தரின் நாமம் மகிமைப்படுவதாக.**



# கேள்வி – பதில்

# ஜாமக்காரனின் பதில்கள்



## பரதீசு-பாதாளம்

**கேள்வி:** சத்தியவசனம் ஸ்தாபனத்தினர் விற்கும் **Dr.எம்.எஸ்.வசந்தகுமார்** அவர்கள் எழுதிய **மரணத்தின் மறுபக்கம்** என்ற புத்தகத்தை நீங்கள் பிரசங்கம் செய்த கூட்டத்தில் அறிமுகப்படுத்தினீர்கள். அதை உடனே வாங்கி படித்தேன். ஆனால் அவருடைய சில கருத்துக்களை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.



ஒருவன் மரித்தால் அவன் ஆத்துமா உடனே **பரலோகம்** போகமுடியாது என்றும் லாசரு-ஐசுவரியவான்போல **பாதாளம்-பரதீசு** என்ற இரண்டு இடங்களுக்குத் தான் போகமுடியும் என்று நீங்கள் பிரசங்கித்தீர்கள். நீங்களும், சகோ.**அகஸ்டின் ஜெபகுமார்** அவர்களின் கருத்துக்களும் ஒரே மாதிரியாக இருக்கிறது. ஆனால் **Dr.எம்.எஸ்.வசந்தகுமார்** எழுதியது வித்தியாசமாக இருக்கிறது. **மனிதன் ஒருதரம் மரிப்பதும் பின்பு நியாய தீர்ப்படையவதும் மனிதனுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது** என்ற வசனத்தை ஆதாரமாக வைத்து எந்த மனிதனும் மரித்த உடனே அவனுக்கு **நியாயத் தீர்ப்பும்** நடைபெறும், அதன்பின் உடனே **பரலோகமும்** உண்டாகும் என்று எழுதியிருக்கிறார். இதற்கு ஆதாரமாக அவரும் **ஐசுவரியவன்-லாசரு** உதாரணத்தைத்தான் அவரும் ஆதாரமாக கூறுகிறார்.

**பதில்:** **Dr.எம்.எஸ்.வசந்தகுமார்** *எழுதிய அவருடைய அந்த புத்தகத்தை நான் வாசிக்கவில்லை. ஆனால் இரண்டு வருடமாகவே பலர் அந்த புத்தகத்தைக்குறித்து இதே விமர்சனத்தை எனக்கு எழுதியுள்ளனர். அந்த புத்தகத்தை வாசித்தப்பின் பதில் எழுதலாம் என்று இந்த கேள்வியை ஒதுக்கிவைத்தேன். என் ஊழியத்தினிமித்தம் இதுவரை அந்த புத்தகத்தை மட்டுமல்ல, எந்த புத்தகத்தையும் வாசிக்க நேரம் கிடைக்கவில்லை. இதைக்குறித்து கடிதங்கள் அதிகம் வரவே இனி காலம் தாழ்த்தாது அவரின் அந்த புத்தகத்தை வாசிக்காமலேயே எனக்கு தெரிந்ததை எழுதுகிறேன்.*

*சகோதரன் அவர்கள் எழுதியதுபோல் ஒரே தரம் தான் நியாயதீர்ப்பு.* **ஐசுவரியவான்-லாசரு** *அனுபவித்ததும் அந்த நியாயதீர்ப்பின் ஒரு பாகம்தான். மரித்துப்போன ஆத்துமாக்கள் கர்த்தரின் கைக்கு சென்றபின் இரட்சிக்கப்பட்டவர்களையும்-மனம்திரும்பாதவர்களின் ஆத்மாக்களையும் ஒரே இடத்தில் வைக்காமல் இப்போதே அவர்களை தனித்தனியாக பிரித்து வைக்கிறார். இயேசுகிறிஸ்து மனிதனாக இந்த உலகில் வாழ்ந்தவரை பாதாளமும்-பரதீசியும் பூமியில் இருந்ததாகத்தான் அறியப்பட்டது. இரண்டையும் ஒரே பெயரில்தான்-* Siol *என்று அழைக்கப்பட்டது.*

*பழைய ஏற்பாட்டில் கர்த்தருடைய பிள்ளைகள் மரிக்கும்போது நான்* **பாதாளத்தில்** *இறங்கும்போது என்று வார்த்தையைத்தான் உபயோகிக்கிறார்கள். பாதாளத்தில்* **பரதீசு** *என்ற ஒரு இடமும் உண்டு என்பதை பழைய ஏற்பாட்டில் பிரித்து காட்டவில்லை. இயேசுகிறிஸ்துதான் அதை*

*பிரித்துக்காட்டி விளக்குகிறார். இயேசுகிறிஸ்து **உயிர்தெழுந்தபோது** அநேக பரிசுத்தவான்களும் கல்லறையிலிருந்து உயிற்தெழுந்தார்கள் என்று **மத்தேயு 28:52ம்** வசனத்தில் பார்க்கிறோம். அன்று உயிற்தெழுந்தவர்கள் எங்கு போனார்கள்? என்ற கேள்விக்கு பதில் இல்லை.*

***பவுல்** தன் அனுபவத்தைக் கூறும்போது தான்**மூன்றாம் வானம்வரை** எடுத்துக் கொள்ளப்பட்டு **பரதீசுக்கு** சென்று அங்கு தான் கண்டதையும் அங்குதான் கேட்டதையும் பவுல் அறிவிக்கிறார். தான் கண்ட அந்த இடத்தைத்தான் **பரதீசு** என்று குறிப்பிடுகிறார்.*

*ஆகவே, **பரதீசு** இப்போது இந்த பூமிக்குள் இல்லை என்று திட்டமாக அறியமுடிகிறது. **பவுல்** கண்ட **பரதீசு** மூன்றாம் வானத்துக்கு எப்போது மாற்றப்பட்டது?என்ற கேள்விக்கு இயேசு உயிற்தெழுந்தபோது அதே நாளில் பூமிக்குள் இருந்த பரதீசும் 3ம் வானத்துக்கு இடம் மாற்றப்பட்டிருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது.*

*பவுல் குறிப்பிட்ட இந்த இடம் **பரலோகம்** அல்ல - **பரதீசு** ஆகும். எபிரேய பாஷையில் **பாதாளத்தையும் - பரதீசையும்** எப்படி ஒரே பெயரில் அழைத்தார்களோ? அப்படியே பரதீசியைகூட **பரலோகம்(Heaven)** என்ற பெயரில்தான் வேதத்தில் சில இடங்களில் குறிப்பிட்டுள்ளார்கள். ஒரு விஷயத்தை இரண்டு பெயர்களில் குறிப்பிடுவது என்பது எபிரேய சரித்திரத்தில் பல இடங்களில் நாம் காணலாம்.*

*பரிசுத்தாவியைப்பற்றி குறிப்பிடும் இடங்களில் **ஆவியினாலும்-ஜலத்தினாலும் - ஆவியினாலும்-அக்கினியினாலும்** என்று இரண்டு பதத்தை இடங்களில் எபிரேயர்கள் எழுதியதின் மூலம் இதை அறியலாம்.*

*இந்த உலகத்தில் **முடிவுகாலம்-அந்திகிறிஸ்துவின்காலம்** என்றெல்லாம் வேதம் குறிப்பிடுகிறது. இதில் ஆயிரம்வருட அரசாட்சி- **புதிய வானம்-புதிய பூமி** ஆகிய இடங்களில் வாழும் காலங்கள் ஆகிய இவைகள் எல்லாம் சம்பவித்து முடிந்தபிறகுதான் கர்த்தருடைய பிள்ளைகள் போய் சேரும் முடிவான இடமாக **பரலோகம் அறியப்படுகிறது.***

*ஆயிரம்வருட **அரசாட்சி-புதியவானம்** புதியபூமியின் காலகட்டம் யாவும் முடிவான கடைசி **நியாய தீர்ப்புக்கு**பின் சம்பவிக்கவேண்டியது ஆகும். அதன்பின்தான் நிரந்தர இடமாக **பரலோகம்** குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இப்போது நான் எழுதியதில் அபிப்ராய வித்தியாசம் இருக்குமானால் **Dr.வசந்தகுமார்** அவர்கள் அவைகளை குறிப்பிட்டு எனக்கு எழுதினால் நான் அதை அப்படியே ஜாமக்காரனில் வெளியிடுகிறேன். வாசகர்கள் **கர்த்தரின் வருகைக்கும்-**அவரவர்களின் **மரணத்தை** சந்திப்பதற்கும் ஒவ்வொரு நிமிடமும் ஆயத்தமாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## LEF(Laymen Evangelical Fellowship)

**கேள்வி:** LEF(Laymen Evangelical Fellowship) **என்ற சபையில் ஏதோ பிரச்சனை என்று பேசிக்கொள்கிறார்கள். சென்னையிலுள்ள** LEF **தலைமை சபைக்கு வழக்கமாக சென்று வரும் எங்களுக்கே அங்கு நடக்கும் பிரச்சனைகள் என்ன என்பது தெரியாமல்போனது!. ஆனால் ஏதோ பிரச்சனை என்று கூற கேட்டோம். அங்கு சபையில்உள்ள சிலர் எங்களிடம் ஜாமக்காரனுக்கு எழுதி கேளுங்கள் என்றார்கள். தயவுசெய்து எங்களுக்கு ஒரு ஜாமக்காரனை மாதந்தோறும் அனுப்பி எங்கள் சபையின் பிரச்சனையின் விவரங்களையும் எழுதி அனுப்பவும். ஜாமக்காரனின் சந்தா எவ்வளவு என்பதையும் தெரிவிக்கவும்.**

***பதில்:** உங்களை இப்படி உசுப்பிவிட்ட அன்பர் யார்? அவரும் LEF சபையின் அங்கத்தினர்தானே அவர் ஏன் அவர் சபையைப்பற்றி என்னிடம் கேட்க சொல்கிறார் என்று யோசித்தீர்களா?. கேள்வி*

கேட்க சொன்ன நபர் LEF சபையின் உண்மையான விசுவாசமுள்ள நபர் என்று என்னுகிறேன். தன் சபையின் பிரச்சனை அவருக்கு மிக நன்றாக தெரியும். ஆனால் தன் வாயால் அதை அறிவிக்க அவர் விரும்பவில்லை. இப்படிப்பட்ட **நல்ல விசுவாசிகளால் வளர்ந்த சபைதான்** LEF சபை. ஆனால் அதன் ஸ்தாபகர் சகோ.ஜோ அவர்களின் நிர்வாகம் சரியில்லாமல்போனதாலும் தனக்குபின் தன் சபைகளை நிர்வகிக்க சரியான நபர்களை **உருவாக்காமல்** ஜோ அவர்கள் மரித்துப்போனார். ஆகவே பிரச்சனை பூதாகாரமாக இப்போது வெளியே தெரிய ஆரம்பித்துவிட்டது.

**சகோ.ஜோ** அவர்கள் உயிரோடு இருக்கும் போதே அந்த சபையின் ஆணிவேராக கூறப்பட்ட **உபதேசங்களான ஒப்புரவாகுதல்,ஊழல்** அற்ற வாழ்க்கை,வேறுபட்ட பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை,திருப்பிகொடுத்தல்,சொந்தவாழ்க்கையில் சாட்சியுள்ள ஜீவியம் ஆகிய சபை சட்டங்கள் அவர் காலத்திலேயே செயல்முறையில் அவராலேயே பின்பற்றமுடியாமல்போனது. தன் சகோதரியோடு பல வருடங்கள் சகோ.ஜோ அவர்கள் ஒப்புரவாகவில்லை. பண விஷயத்தில் உண்மை வேண்டும் என்ற உபதேசம் மேலும் பண விஷயத்தில் **வெளிப்படையான சாட்சி** வேண்டும் என்ற உபதேசமும் கட்டளையும் சென்னை **தலைமை** சபை மற்றும் **பெங்களூர்** சபையை தவிர மற்ற ஊர்களில் உள்ள அவருடைய சபைகளிடத்தில் கண்டிப்பான முறையில் செயல்படுத்தினார்.

ஆனால் **தன் உறவுக்காரர்கள்** நடத்தும் பெங்களூர் சபையில் பல வருடங்களாக பணவிஷயத்தில் ஊழல் நடைப்பெறுகிறதுஎன்றும், பெங்களூர் சபையை நடத்தும் அந்த தம்பதிகள், அவர்களின் பிள்ளைகள் வருமானத்துக்கு மீறின சொத்துக்கள் சேர்த்த விவரங்களையும் வரிசையாக குறிப்பிட்டு ஆதாரத்தோடு பல வருடமாக சிலர் சகோ.ஜோ அவர்களுக்கு எழுதி அறிவித்தும் சகோ.ஜோ அவர்கள் பெங்களூர் சபை பொருப்பாளர்கள் மீது ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. பெங்களூர் சபையின் காணிக்கை விவரம் தலைமைக்கு ஏன் அறிவிக்கவில்லை?. அதோடு அவர்கள் ஏன் தலைமைக்கு சபை காணிக்கையை அனுப்பவில்லை? என்று யாரும் கேள்வி எழுப்பவில்லை? என்கிறார்கள். இப்போது பொருப்பேற்றிருக்கும் ஜோ அவர்களின் மகன்.சகோ.ஜான்டேனியல் அவர்களும் பெங்களூர் சபை பொருப்பாளர்களிடம் சொத்துவிவரம்,பணவிவரம் ஆகியவைகளை கேட்க அஞ்சுகிறார் என்றும் சந்தேக கேள்வி எழுப்பி உள்ளார்கள். தலைமைக்கு அனுப்பப்பட்ட பெங்களூர் சபை ஊழல் விவர பட்டியல் எனக்கும் ஒரு காப்பி அனுப்பப்பட்டுள்ளது.

**உறவுக்கு** ஒரு சட்டம்- **ஊருக்கு** ஒரு சட்டம் என்ற பழமொழி LEF சபையில் உண்மையாகிவிடக்கூடாது என்று **நானும்** மனவேதனையுடன் இதை எழுதுகிறேன். பல மாதங்களாக LEF பற்றிய விவரங்களைக் குறித்து ஏன் இன்னும் ஜாமக்காரனில் எழுதவில்லை என்று கேட்டு பல கடிதங்களும், இமெயில்களும் வந்தது. அவர்களின் தலைமை குறிப்பிட்ட பலவித புகார்களின் மீது நடவடிக்கை எடுக்க தயங்கினால் அடுத்த மாத ஜாமக்காரனில் விவரங்கள் எழுத முயற்சிக்கிறேன்.

இப்போதே LEF சபைமக்கள் தலைமை சபை பிரச்சனைகள் காரணமாக பல ஊர்களில் உள்ள LEF சபையைவிட்டு விலகி வேறு சபைகளுக்கு போய்க்கொண்டிருக்கிறார்கள். சேலத்தில் மட்டும் 3 குடும்பங்கள் LEF சபையிலிருந்து CSI சபையில் இணைந்துவிட்டனர். இது 10ம் வகுப்பு படிக்கும் மாணவன் மறுபடியும் ஒன்றாம் வகுப்பில் போய் சேர்ந்ததுபோல ஆகிவிட்டது.

சென்னையில் உள்ள LEF சபையில் உள்ள ஜாமக்காரன் வாசகர்கள், சேலம் LEF சபையில் உள்ள வாசகர்கள் தயவுசெய்து நான் கூறுவதை கவனிக்கவும். நீங்கள் தலைமை சபையில் உள்ள பிரச்சனை மனதில்கொண்டு உங்கள் நல்ல சபையைவிட்டு விலகினால் உங்கள் ஆத்துமாவுக்குதான் நஷ்டம் உண்டாகும். தலைமை LEFல் சீக்கிரம் மாற்றம் உண்டாகவேண்டும் என்று நாம் யாவரும் ஜெபிப்போம். LEFல் சரிப்படுத்தவேண்டிய மற்ற விவரங்களை விரைவில் ஜாமக்காரனில் எழுத முயலுகிறேன். LEF சபையும், சபை மக்களும் உபதேச விஷயத்தில் தங்களை மாற்றிக்கொள்ள சில வசன அடிப்படையிலான காரியங்களைக்குறித்துத்தான் ஜாமக்காரனில் எழுதப்போகிறேன்.❖❖❖

# TVயில் சில காட்சிகள்

ஏஞ்சல் டிவியில் கர்ப்பிணி பெண்களை ஏஞ்சல் டிவி நிலையத்துக்கே வரவழைத்து வயிற்றில் உள்ள கருவை அல்லது குழந்தையை தீர்க்கதரிசிகளாக மாற்றும் விசேஷ ஜெபம் ஏறெடுக்கிறார்கள். இதற்கு பணம் செலுத்தி முன்பதிவு செய்யவேண்டும். வந்த கர்ப்பிணி பெண்களை ஜெபம் நடத்துபவர்கள் அந்நியபாஷை பேசி குதிக்க வைக்கிறார்கள். நானும் அந்த நிகழ்ச்சியை காண நேர்ந்தது. ஆவி நிறைந்து அந்த நிறைமாத கர்ப்பிணிகள் கை உயர்த்தி பைத்தியக்காரிகளைப்போல் **அந்நியபாஷை** என்ற பெயரில் உளரி **குதிக்கும்போது** கர்ப்ப சிதைவு உண்டாகலாம். எந்த நிமிடத்திலும் குழந்தை வெளிவந்துவிடுமோ என்று நினைக்கும் அளவு அந்நியபாஷை பேசி **குதிப்பதை கள்ள உபதேசம்** என்று கூறாமல் என்ன என்று அழைப்பது?.

இந்த டிவியை யாரும் தடுக்க முடியாது. இவர்களுக்கு பணஉதவி செய்பவர்களும் இவர்களைப்போலவே குருட்டு விசுவாசத்தில் உள்ளதால் இவர்களையும் தடுக்கமுடியாது.

முள்ளை முள்ளால்தான் எடுக்கமுடியும் என்பதுபோல இவர்களின் பலருடைய தவறான கள்ள உபதேசங்களை படம்பிடித்து YOU TUBE வழியாக வலைதளங்களில் இன்டர்நெட் மூலமாக காட்டுகிறார்கள். ஆனால் பலர் அதை காண்பதில்லை. இத்தனை வருடத்தில் நானே இந்த பிசாசின் ஊழியங்களை ஜீன் 5ம் தேதி YOU TUBEல் கண்டேன். மிருகங்கள்போல ஊளையிடும் ஊழியர், தொட்டவுடன் மக்களை கீழே தள்ளி விழ வைக்கிறார். சிலரை அடிவயிற்றில் கை வைத்து பாஷையில் பேசுகிறார். அந்த நபர் பலத்த சிரிப்புடன் சிரித்துக்கொண்டே குதிக்கிறார். சிலர் சிரித்து கீழே விழுகின்றனர்.

இந்த கன்றாவி காட்சிகளை டிவி சேனலில் கொண்டுவரவேண்டும். அப்போதுதான் அனைவரும் காணமுடியும்.

உருபடியான கிறிஸ்தவ சேனல் என்று **சால்வேஷன் டிவி** என்ற பெயரில் ஒரு கிறிஸ்தவ சேனல் அறிமுகப்படுத்தியுள்ளார்கள். அதிலும் அந்நியபாஷை விளையாடுகிறதே. மற்ற கிறிஸ்தவ சேனல்களைக்காட்டிலும் ஆவிக்குரிய செய்திகளுக்கும், சாட்சிகளுக்கும் மிஷனரி ஊழியங்களுக்கும் இடம்கொடுத்திருப்பது, மலையாள பாடல்களும் இடம் பெறுவது வித்தியாசமானதுதான். என்றாலும் மற்ற சேனல்போல் மாறிவிடுமோ என்று சந்தேகிக்க சில காரணங்கள் உண்டு. இவர் அடிக்கடி தன் எஜமான் என்று குறிப்பிடுகிற நபர் **ஏஞ்சல் டிவி சாது செல்வராஜ்** அவர்களாகும். எப்படி இவர் **பாஸ்டர்.வின்சென்ட்க்கு** எஜமானன் ஆனார். அவரை தன் பழைய எஜமானன் என்று அழைப்பதும், **ஏஞ்சல் டிவியில்** ஏற்கனவே பணியாற்றியவர் என்பதாலும், ஏன் அங்கிருந்து பிரிந்தார் என்ற காரணங்களும் யோசிக்கும்போது எனக்கு சில கேள்விகள் எழும்புகிறது. மேலும் ஏஞ்சல் டிவியிலிருந்து விலகியவுடன் 50 ஆயிரம் சம்பளம் ஒரு பங்களா கொடுப்பதாக ஆசைகாட்டிய நபர் யார்? சால்வேஷன் டிவி தொடங்குவதாக தீர்மானித்து ஒரு மணி நேரத்தில் பிசாசு இவர் கழுத்தை நெறித்து கொல்ல பார்த்தான் என்று இவர் கூறிய சாட்சியும் பல கேள்விகளை எழுப்புகிறது.

பிசாசு யாரையும் கொலை செய்யமுயலமாட்டான். ஆனால் ஊழியத்தை தடை செய்ய முயலுவான். இப்படியிருக்க சகோதரனின் சாட்சியில் சில கேள்விகள் எழும்புகிறது. அவைகளைக்குறித்து பிறகு நேரம்வரும்போது எழுதுகிறேன். இப்போதைக்கு சல்வேஷன் டிவி

என்ற தமிழ் கிறிஸ்தவ சேனலை தைரியமாக பார்க்ககூடியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட கிறிஸ்தவ டிவி சேனல்கள் மூலமாகத்தான் கள்ள ஊழியர்களைக்குறித்து புகைப்படத்துடன் இவர்கள் கூட்டங்களில் உள்ள துள்ளலை, ஆவியில் நிறைந்து சிரிப்பதை ஆவியில் நிறைந்து ஊளையிடுவதை,ஊதி கீழே வீழ்த்துவதை கிர்ப், விக்டர்ஞானராஜ் ஊழியங்களில் உள்ள பிசாசின் பயங்கர தவறான கள்ள உபதேசங்கள் என்ன என்பதை பகிரங்கப்படுத்தி ஜனங்களை எச்சரிக்கவேண்டும். இதுதான் கள்ளஊழியர்களை ஜனங்களுக்கு அடையாளம் காட்டி ஜனங்களுக்கு விழிப்புணர்வை உண்டாக்கி ஜாக்கிறதை படுத்தமுடியும். இப்படிப்பட்டவர்களை பகிரங்கப்படுத்த டிவி சேனல்தான் சரியான வழியாகும். ஜெபியுங்கள்.நானும் ஜெபிக்கிறேன்.

# உங்களை மாற்றிக்கொள்ளுங்கள்:

**மாமியார்-மருமகள் பிரச்சனை உருவாகமல் இருக்க குடும்பம் உடையாமல் இருக்க, கணவனே, மனைவியோ விவாகரத்து செய்யாமல்இருக்க நீங்கள் செய்யவேண்டியது, உங்கள் எண்ணங்களை மற்றவர்கள் ஏற்றுக்கொண்டு அவர்களை மாற்றமுயலும் போதுதான் பிரச்சனை உருவாகிறது. நீங்கள் கர்த்தரை நேசிப்பவரானால், மனந்திரும்பின அனுபவம் உள்ளவரானால் கர்த்தரை பிரியப்படுத்தும்படி வாழமுயன்றால் (சங் 143:10)ன்படி குடும்பம் உடையாது!, விவாகரத்து உண்டாகாது!.**

**நீங்கள் செய்யவேண்டியது: மற்றவர்களை மாற்ற முயற்சிக்காமல் உங்களை குடும்பத்தில் உள்ளவர்கள் விரும்புகிறபடி கணவர்-மனைவி விரும்புகிறது உங்களை மாற்றிக்கொள்ளுங்கள். குடும்பம் உடையாது, விவாகரத்து தேவையில்லை, பிள்ளைகள் அனாதையாகாது. நீங்கள் கர்த்தரை பிரியப்படுத்துவராவீர்கள்!. கர்த்தர் நமக்கு கொடுத்திருப்பது ஒரே ஒரு வாழ்க்கைதான்.**

## விலாசம் புதுபித்தல்:

**ஜாமக்காரன் புதிய விலாச பட்டியல்** ஏறக்குறைய முழுவதுமாக தயாரிக்கப்பட்டு விட்டது. விலாசம் புதுப்பிக்கும் கார்டை அல்லது ஜாமக்காரன் வேண்டும் என்று விண்ணப்பிக்கும் கடிதங்களை வைத்து **புது விலாச பட்டியல்** தயாரித்துள்ளோம்.

பழைய வாசகர்களை நாங்கள் இழக்க விரும்பவில்லை. இரண்டுமுறை ஜாமக்காரன் மூலம் விலாசம் புதுப்பித்தல், ஞாபகமூட்டல் அறிவிப்பை எழுதியும் சிலர் கவனிக்கவில்லை. ஆனால் இவர்களெல்லாம் இப்போது மிக தாமதமாக ஒவ்வொருநாளும் நாங்கள் அறிவிப்பை கவனிக்கவில்லை என்றும், எங்கள் விலாசத்தை மறுபடியும் சேர்க்கவேண்டும் என்றும், ஏராளமானவர்கள் எங்களுக்கு எழுதிக்கொண்டேயிருக்கிறார்கள். அவர்கள் பெயர்களை நாங்கள் புதிய விலாச பட்டியலில் உள்ள **புதிய அங்கத்தினர் விலாசப்பட்டியலில் இணைத்து** அவர்களுக்கு ஜாமக்காரனை அனுப்ப ஆரம்பித்துவிட்டோம். புதிதாக யாராவது ஜாமக்காரன் தங்களுக்கும் வேண்டும் என்று விரும்பினால், உங்கள் முழு விலாசத்தையும் எங்களுக்கு எழுதி விண்ணப்பித்தால் உடனே விலாசப்பட்டியலில் நேரிடையாக **அவர்கள் விலாசத்தை** இணைத்துக்கொள்வோம். எங்கள் வாசகர் குடும்பத்தில் ஒருவராக அவர்களை இணைத்துக்கொள்வதில் நாங்கள் சந்தோஷப்படுகிறோம். அவர்களுக்காக ஜெபிப்பதிலும் தொடர்ந்து கவனம் செலுத்துவோம். புதிய விலாசப்பட்டியலுக்கு நாங்கள் கேட்டுக்கொண்டப் படி அவரவர்களின் விலாசங்களை எங்களுக்கு எழுதியும், பழைய விலாசத்திலுள்ள தவறுகளையும் குறிப்பிட்டு, தெளிவாக எங்களுக்கு கடிதம்,இமெயில் மூலமாக எழுதி இந்த புது விலாசப்பட்டியலை தயாரிக்க எங்களோடு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். **புதிய விலாசத்துடன்** இனி எங்களோடு தொடர்புக்கொள்ளவும், மறக்காமல் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் **கணணி எண்ணையும்** எழுதவும்.

**- (ஜாமக்காரனுக்கு சந்தா ஏதும் இல்லை).**

எச்சரிக்கை! எச்சரிக்கை!!



# வலைதள பேய்



# இணையதளத்தில் வீழும் இளசுகள்

**Selected**

**இன்டர்நெட்** அடிமைத்தனத்தைப்பற்றி **மனநல மருத்துவர்கள்** பெற்றோர்களுக்கு சில ஆலோசனைகளை குறிப்பிடுகிறார்கள்:

1). பிள்ளைகள் வலைதளத்தை பார்க்கும்போது சில நிமிடங்கள் மட்டும் பார்க்கிறார்களா?. மணிக்கணக்காக பார்க்கிறார்களா? என்பதை பெற்றோர் கவனிக்கவேண்டும்.

2). வலைதளத்தை பார்க்கும்போது நீங்கள் ஏதாவது வேலைச்செய்ய சொன்னால் பிள்ளைகள் எரிச்சல் அடைகிறார்களா? என்பதையும் கவனிக்கவேண்டும்.

3). படிப்பதைவிட இன்டர்நெட் பயன்படுத்துவதில் அவர்களுக்கு அதிக நாட்டம் இருக்கின்றனவா?

4). வலைதளத்தில் நேரம்செலவிடுவதால் பெற்றோரோடு, குடும்பத்தின் உறவினர்களோடு, ஆலயம்செல்வது,வேதம் வாசிப்பது குறைக்கப்படுகின்றனவா? அல்லது இவைகளை முற்றிலுமாக வெறுத்துவிட்டு வலைதளத்தில் அவர்கள் சரணாகதி அடைந்துள்ளார்களா? என்பதையும் கவனிக்கவேண்டும்.

5). வலைதளத்தில் வரும் நண்பர்களே தங்கள் வாழ்க்கைக்கு பயனுள்ளவர்கள். மற்றப்படி நேரில் பார்த்து பேசுகிறவர்களெல்லாம் கெட்டவர்கள்,ஏமாற்றுகிறார்கள்,அவர்கள் பொறாமைப் படுகிறவர்கள் என்ற சிந்தையோடு உங்கள் பிள்ளைகள் உங்களிடம் பேசுகிறார்களா?

6). உங்கள் பிள்ளைகள் வீட்டில் உங்களிடம் சந்தோஷமாக பழகாமல் வலைதளத்திற்குள் சென்று பார்க்கும்போதுமட்டும் முகம்மலர்ச்சியுடன் செயல்படுகிறார்களா? என்பதையும் கவனியுங்கள்.

7). படிப்பதற்கு புத்தகமே தேவையில்லை நான் வலைதளத்தின் வழியாக மட்டுமே படித்துக் கொள்கிறேன் என்று உங்கள் பிள்ளைகள் தனி அறைக்குள் சென்று முடங்கிக் கிடக்கிறார்களா? என்பதையும் கவனியுங்கள்.

மேலே கண்ட மாற்றங்கள் உங்கள் பிள்ளைகளிடம் கண்டால் அது நல்ல அடையாளம் அல்ல. பெரிய ஆபத்துக்குள் அவர்கள் சென்றுவிட்டார்கள் என்று அர்த்தம். ஆரம்பத்திலேயே உங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிடுங்கள். அவர்கள் இஷ்டத்துக்கு நீங்கள் அனுமதித்துவிட்டால் பிள்ளைகள் நீங்கள் என்ன சொன்னாலும் கீழ்ப்படியமாட்டார்கள். ஜாக்கிறதை. இப்படி மேலே வாசித்தபடி கேள்விகளுக்கு கண்டபடி ஆம் என்று பதில் வருமானால் நமது பிள்ளைகள் இன்டர்நெட்க்கு அடிமைதான். அவர்களை நாம் சரிசெய்து விடலாம் என்று எண்ணி அவர்களோடு சண்டையிடுவதைக் காட்டிலும், முதலில் நல்ல **மனநல மருத்துவரை** அல்லது ஆலோசகரை அணுகுவது சாலச்சிறந்தது. இல்லையெனில் உங்கள் குடும்பத்திற்குள்ளாக பெரிய கலகமே நடந்துவிடும்.

இப்படி பிள்ளைகள் இன்டர்நெட்டின் அடிமைகளாக மாறுவதற்கு ஒரு காரணம் பெற்றோரே. ஏனெனில் பெற்றோர்கள் தாங்கள் தனியாக டிவி பார்ப்பதற்காகவும், பெற்றோர் தாங்களின் பிறவேலைகளை பார்ப்பதற்காகவும், உங்கள் பிள்ளைகளை சமாளிக்க அந்த பிள்ளைகளுக்கு வீடியோ கேம்ஸ் விளையாட,இன்டர்நெட் தொடர்பை ஏற்பாடு செய்துவிட்டு ஒதுங்கிக் கொள்ளுகிறார்கள். பிள்ளைகள் தங்களுடைய தனிமையை போக்குவதற்காக அவர்கள் இன்டர்நெட்டில் நுழைந்து புதிய நண்பர்களை தங்களோடு பேசுவதற்காகதேடி தெரிந்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த வழிமுறையானது தற்காலிகமாக அவர்களுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தாலும், நாளடைவில் இதுவே பிசாசின் அடிமைத்தனத்திற்கு நேராக பிள்ளைகளை வழிநடத்த ஆரம்பிக்கிறது.

இன்று இந்த இன்டர்நெட் அடிமைத்தனம் மனஉளைச்சல்(Anxiety) அல்லது மனச்சோர்வின் (Depression) அறிகுறியாக மருத்துவ மனநலத்துறை பார்க்கிறது. எனவேதான் நம்முடைய பிள்ளைகள் இப்படிப்பட்ட அடிமைத்தனத்திற்குள் மாட்டிக்கொள்வதற்கு முன்பே அவர்களுக்கு அதை காணாதபடிக்கு ஆரம்பத்திலேயே தடைப்போடுவது நல்லது. அன்றாட பிரச்சனைகளை பிள்ளைகள் எதிர்க்கொள்ள அவர்களை வெளியில் விளையாட அனுமதிப்பது மேலானது. இறைவன் கொடுத்த புதுபடைப்புகள் யாவும் நல்லதுதான். ஆனால் மனிதன் எப்பொழுதுமே அவற்றை தவறாக பயன்டுத்தி மகிழ்ச்சி கண்டவன். எனவே கவனம் தேவை.



# வலையில் சிக்க வைக்கும் வளைதளத்தில் முதல் பாதிப்பு குடும்பம்:



திருமதி.ஜோதிமாலா மனுவேல்.

**வலைதளம்** தன்னுடைய முதல் வலையை **குடும்பத்தின்மீது குடும்ப உறவுகள்மீது** வீசுகிறது. எப்படி? என்கிறீர்களா?

என் குடும்பத்தில் நிகழ்ந்த சில நிகழ்வுகளைக் குறிப்பிட விரும்புகிறேன். என் பிள்ளைகளின் தேவை-விருப்பம்-இவற்றைக்கருத்தில் கொண்டு,முதலாவது ஒரு மேஜைக்கணணி(Computer) பின்னர் இரண்டு மடிக்கணினிகள்(லேப்டாப்) வாங்கி கொடுத்தேன். அதைத்தொடர்ந்து அவர்களுக்கு கொடுக்கப்பட்ட செல்போன்களும் ஆண்ட்ராய்டு போன்களாக மாற்றப்பட்டன. வீட்டில் wi-fi இணைப்பும் ஏற்பாடு செய்து கொடுத்தேன். இப்படி ஒன்றன்பின் ஒன்றாக வாங்கி கொடுக்கப்பட்டாயிற்று. என் பிள்ளைகள்தான் எனக்கு Games விளையாட Download செய்ய, முகநூல்(Face Book)பார்க்க,Google-ல் தேட- எல்லாம் எனக்கு கற்றுத்தந்தார்கள். நானும் (ஏவாளைப்போல்) என் கணவருக்கும் சில Games விளையாடக் கற்றுத்தந்தேன்.

## விளைவு என்ன தெரியுமா?

மாலை நேரங்களில்- வேலை முடிந்து, கல்லூாரி முடிந்து வீடுவந்து சேர்ந்தபின் நாங்கள் அனைவரும் ஆளுக்கொன்றாக எங்கள் கணணிகளை எடுத்து வைத்துக்கொண்டு எங்கள் பணியை ஆரம்பிக்கிறோம். நண்பர்களுடன் **வாட்ஸ்அப்பில்** கருத்துப் பரிமாற்றம், **முகநூாலில்** (Face Book) உரையாடல் என்று இரவு வரை எங்கள் அனைவரின் பணி தொடர்கிறது. Chatting செய்யும்போது அவ்வப்போது எங்களுக்குள் தானாகவே நாங்களே தனிமையில் பையித்தியக்காரர்களைப்போல சிரித்துக்கொள்கிறோம். இதன் விளைவு என்ன தெரியுமா? மாலைநேர எங்கள் வேதவாசிப்பு,இரவு நேர வேத வாசிப்பு ஆலய ஆராதனை எல்லாவற்றிற்கும் Goodbye சொல்லியாகிவிட்டது.

சில மாதங்களுக்குமுன்பு எனக்கு சிறிது உடல்நலக்குறைவு ஏற்பட்டது. கட்டிலில் ஓய்வெடுக்க வேண்டிய கட்டாயம் உண்டானது. நான் படுத்துக்கொண்டே என்னைச் சுற்றிலும் பார்க்கிறேன். என் கணவன், என் மூன்று பிள்ளைகள் ஆளுக்கொரு லேப்டாப்பில்,கம்பியூட்டரில் அமர்ந்து ஜரூராக பணி செய்துகொண்டிருக்கிறார்கள். Chatting,Searching,Games என்று அவர்கள் பணி தொடர்கிறது. இப்போது என் வீடு பார்ப்பதற்கு ஒரு Software Company- போல் காட்சியளிக்கிறது. படுக்கையில் கிடந்த எனக்கு உதவ இவர்களில் யாரை அழைப்பது அப்போதுதான் நான் என்னைப்பற்றிநினைத்தேன். நானும் இதுநாள்வரை இதைத்தானே செய்து கொண்டிருந்தேன்!. உள்ளத்தில் குத்தப்பட்டேன்,சிந்தித்தேன். தனியாக நான் கர்த்தரிடம் மன்னிப்புகேட்டு ஜெபித்தேன். நான் என் மனத்திற்குள் ஒரு புதுதிட்டம் தயாரித்தேன். இப்போது குடும்பத்திடம் நான் எடுத்த புது திட்டத்தைக்குறித்து பேச எனக்கு ஞானம் தாரும் என்று ஜெபித்தேன். என் பிள்ளைகளை என்னருகே அழைத்தேன். அவர்களிடம் அன்பாகப் பேசினேன். குடும்பத்தில் சிரித்து தமாஷ்செய்து பேசி சந்தோஷமாக கழித்த பழைய நினைவு களை அவர்களுக்கு நினைவுபடுத்தினேன். என் செல்வங்களே!, இப்போதெல்லாம் நாம் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துப்பேசி சிரித்து எவ்வளவு நாட்களாகிவிட்டது. கணணி இல்லாத நாட்களில் நாம் என்னவெல்லாம் பேசுவோம்? சிறுவயதில் செய்த குறும்புத்தனங்களை எல்லாம் பேசிப்பேசி மகிழ்வோமே? அந்த நாட்கள் எவ்வளவு இன்பமான நாட்கள் இன்று அனைத்தையும் நாம் யாவரும் இழந்துவிட்டோமே? என்று மென்மையாகக்கூறினேன்.

நான் அறிவித்தபோது யாரும் கோபப்படவில்லை. நாங்கள் அனைவரும் கடவுளின் கிருபையால் உணர்த்தப்பட்டோம். நாங்கள் குடும்பமாக சேர்ந்து அனைவரும் ஒரு முடிவெடுத்தோம். வலைதளம் பார்ப்பது Chatting,Searching,Games இவைகளை தூக்கி எறியவில்லை. ஆனால் இவைகளுக்கு தினம் ஒரு மணிநேரம் மட்டுமே செலவழிப்பது என்றும், மீதி நேரங்களில் **குடும்பமாக அமர்ந்து பேசுவது** என்றும் ஒன்றாக பேசி தீர்மனித்தோம். இப்படி ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக நேரத்தை ஒருவருக்கொருவர் பேசி நாங்கள் ஒதுக்கினோம். என் திட்டத்துக்கு என் முழு குடும்பமுமே ஒத்துழைப்பு தந்தது, அது அத்தனையும் தேவ கிருபையே!.இன்று நாங்கள் குடும்பமாக அமர்ந்து பேசுகிறோம். சிரிக்கிறோம். உள்ளூர் செய்தி முதல் உலகசெய்தி வரை எங்கள் வரவேற்பறையில் உட்கார்ந்து ஒருவருக்கொருவர் பேசி அலசுகிறோம். எத்தனை சந்தோஷம். இப்போது நாங்கள் யாவரும் வேதம் வாசிக்கிறோம், ஜெபிக்கிறோம், குடும்பமாக ஆண்டவருக்கு **முதலிடம்** கொடுக்கிறோம். எங்கள் குடும்ப உறவுகள் பாதிப்படையாதபடி **சரியான நேரத்தில்** எங்களை உணர்த்தி விழித்துக்கொள்ளச் செய்த **என் இயேசுவே! உமக்கு நன்றி!** என்று நினைக்கும்போதெல்லாம் துதிக்கிறோம். கர்த்தருக்கே மகிமைஉண்டாவதாக.

**ஜாமக்காரன்:** அன்பான வாசகர்களே, மேலே வாசித்த அந்த சகோதரியின் அனுபவ சாட்சியை உணர்ந்துகொண்டீர்களா? இந்த நவீன யுகத்தில் கணணி முதல் மொபைல், லேப்டாப்,வீடியோ விளையாட்டு இவைகள் யாவும் அத்யாவசிய தேவைகளில் ஒன்றாகவிட்டது. இது காலத்தின் கட்டாயம். ஆனால் அந்த சகோதரி கம்பியூட்டர்,வீடியோ கேம்,மொபைல் எதையும் தூக்கி எறியவில்லை. கர்த்தருக்கு முதல்இடம் கொடுக்கப்பட்டு மற்றவைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அவற்றிக்கு நாம் **அடிமையாகிவிடாமல்** அவைகளை நாம் அடிமைப்படுத்துவோம். 1சாமு 2:30 **என்னை கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன், என்னை அசட்டை செய்கிறவர்களை கனஈனப்படுவார்கள்.** வீட்டில் புராஜட் ஒர்க் செய்பவர்கள் இரவு 8 மணிக்குமேல் கம்பியூட்டர் அல்லது லேப்டாப் அருகே போகாதீர்கள்.

அந்த இரவு குடும்பத்துக்காக ஒதுக்குங்கள். உங்கள் குடும்பத்தில் இழந்த சந்தோஷம் திரும்பபெற அந்த சகோதரியைப்போல ஜெபத்தோடு பிள்ளைகளுக்கு,கணவருக்கு விளக்குங்கள். அவர்களை கோபப்படுத்தாமல் அன்போடு இணங்கவைப்பது ஆவியானவர் வேலை. நீங்கள் உங்களை முதலில் சரிபடுத்திக்கொள்ளுங்கள். நம் குடும்பத்தில் **அன்பைவிட பாசம்** மிக முக்கியம். அதை இழந்துவிடாதபடி பாருங்கள். அன்பும் பெருகும்,கர்த்தரின் பிரசன்னத்தை வீட்டில் உணருங்கள். கர்த்தர் உதவுவாராக.

## ஃபேஸ்புக்(முகநூல்) விபரீதங்கள்:




பழைய நண்பர்களைத்தொடர்புக்கொள்ளவும், புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்ளவும், தகவல் பரிமாற்றங்களுக்கும் உதவும் வலைதளமே பேஸ்புக் என்பது.

விமலாவும்,விஜயனும் மகிழ்ச்சியாக வாழ்ந்த இளஞ்சோடிகள். விஜயன் தன் மனைவிக்கு ஒரு ஸ்மார்ட் போன் வாங்கிக்கொடுத்திருந்தான். விஜயன் பணிக்குச் சென்றபின் ஃபேஸ்புக்கில் நேரத்தைப் போக்கினாள். ஒருநாள் திடீரென அவளைக் காணவில்லை. பல இடங்களில் தேடியும் கண்டுபிடிக்க முடியாததால் விஜயன் காவல்துறையை நாடினான். அவர்கள் ஓர் இளைஞனோடு அவள் இருப்பதை காவல்துறையினர் கண்டுபிடித்தனர். ஃபேஸ்புக் மூலமாக அந்த இளைஞரிடம் நட்பாக பழகி அது காதலாக மாறியிருக்கிறது. இப்போது கணவனோடு வாழ அவளுக்கு விருப்பமில்லை என்று கூறிவிட்டாள். கணவனோடு பகிர்ந்துக்கொள்ள வேண்டிய காரியங்களை வேறு ஆண்களோடு வலைதளங்களில் பகிர்ந்துக்கொள்வதால் இப்போது **விவாகரத்துகள்** பெருக ஆரம்பித்துள்ளன. இன்டர்நெட்டில் யாரும் யாருடைய Face Book பக்கங்களையும் திறக்கலாம். பார்க்கலாம், படிக்கலாம், யாரோடும் சாட் செய்யலாம் இந்த சுதந்திரம் பல பாவ பிரச்சனைகளை உருவாக்குகிறது.

# மற்றொரு சம்பவம்:

❖ தமிழகத்தைச் சார்ந்த ஒரு பெண் இங்கிலாந்தில் வசித்துவந்தார். சென்னையைச் சேர்ந்த ஒருவர் பேஸ்புக் மூலம் அவரிடம் தொடர்புகொண்டு தான் ஓர் **அனாதை இல்லம்** நடத்துவதாகவும், தான் மனைவியை இழந்தவர் என்றும் கூறினார். அந்தப்பெண் பலரிடம் பணம் வசூல் **செய்து அவருக்கு** அனுப்பியுள்ளார். ஒருநாள் அந்த நபர் **மோசடிப் பேர்வழி** என்பதை அறிந்து அதிர்ச்சியுற்றாள். **தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து மனஉளைச்சலுக்கு (Depression)** ஆளானாள்.இப்படிப்பட்ட பல ஏமாற்றங்களால் முகநூல்(Face Book)பக்கங்கள் நிரம்பியிருக்கின்றன. **பேஸ்புக்** என்பது ஒரு கூர்மையான கத்தி. அதைக் கவனமாகக் கையாள வேண்டும். வீட்டின் ஜன்னல் கதவுகளைத் திறந்து **பேஸ்புக்** உங்களுக்கு உலகைக்காட்டுவது உண்மைத்தான். ஆனால் ஜன்னலைத் திறக்க வேண்டிய நேரத்தில் மட்டும் திறந்தால் **தென்றலை** அனுபவிக்கலாமே!.

## செல்பி என்னும் புற்றுநோய்:

தன்னைத்தானே **புகைப்படம்** எடுத்துக்கொள்ளும் **"செல்பி"** என்னும் புற்றுநோய் இப்போது வேகமாகப் பரவிவருகிறது. செல்பிக்கு கிடைக்கும் "லைக்"குகள் செல்பி பிரியர்களை வலைக்குள் சிக்க வைத்து மீண்டும்மீண்டும் எடுக்கத் துாண்டுகிறது. 2013ம் ஆண்டு ஆக்ஸ்போர்டு அகராதி அந்த ஆண்டின் புகழ்பெற்ற வார்த்தை **"செல்பி"** என்று கூறுகிறது. இந்த செல்பி மோகம் சிலசமயம் உயிரைப் பறிக்கும் அபாயத்தையும் ஏற்படுத்துகிறது. அதிரடியான

புகைப்படங்கள் எடுத்து வலைதளத்தில் பதிவுசெய்யும் ஆர்வத்தில் விபத்தில் சிக்கி விடுகின்றனர். வேகமாக வரும் புகைவண்டியின் முன்நின்று **செல்பி** எடுத்துக்கொள்ளும்போது புகைவண்டி மோதி உயிரிழந்தவர்கள் உண்டு. மிக உயரமான மற்றும் ஆபத்தான இடங்களில் நின்று செல்பி எடுத்தபோது நிலைதவறி தடுமாறி விழுந்து உயிரிழந்தவர்களும் உண்டு. எதுவும் அளவுக்கு மீறினால் விபரீதமே.



## ஆன்லைன் வர்த்தகம் ஆபத்தானதா?

ஊசியிலிருந்து உலகையே ஒரு Single Clickல் வாங்கிவிடலாம். கடைகடையாக ஏறி பொருட்களைவாங்குவதைவிட கணிப்பொறி முன் அமர்ந்து ஆன் லைன் ஷாப்பிங் செய்வது தற்போது பரவலாகக் காணப்படுகிறது. இதற்கான இணையதளங்களளை நன்கு ஆராய்ந்து எது நம்பத்தகுந்தது என்பதைக் தெரிந்துக்கொள்ளவேண்டும். தொடர்பு முகவரி,கைபேசி எண், இமெயில், **ஐ.டி.புகார்எண்** ஆகியவைகளை **குறிப்பிடாத** இணைதளம் போலியானது. இணையதளம்மூலம் வாங்கும் பொருள்கள் சில சமயம் தரமான பொருட்களுக்குப் பதிலாக கல்லும், மரக்கட்டைகளும் அனுப்பும் ஏமாற்று வேலைகளும் நடைபெறுகின்றன. போலியான முகவரி அளித்து பணம்பறிக்கும் சம்பங்கள் ஏராளம் நடைபெறுகின்றன. விஞ்ஞான வளர்ச்சியில், தொழில்நுட்பமுன்னோற்றத்தில் செல்போன்,கணிப்பொறி, பேஸ்புக்,வாட்ஸ்அப், ட்விட்டர் போன்றவற்றைப் பயன்படுத்துவதில் தவறில்லை. இந்தியாவில் 7கோடி பேர் வாட்ஸ்அப் பயன்படுத்துவதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. வினாத்தாளை செல்போனில் பதிவுசெய்து வாட்ஸ்அப்பில் அனுப்பி விடைகளைப்பெற்று பரீட்சை நேரங்களில் கேள்விக்கான பதில்களை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பதில்களை அளித்த ஊழல் சம்பவம் சமீபத்தில் கண்டுபிடிக்கப் பட்டது. ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுக்கவேண்டிய ஆசிரியர்களே வலைதளத்தைத் தவறான காரியத்திற்குப் பயன்படுத்துவது எவ்வளவு இழிவானது? வலைதள வலைக்குள் விழாமல் அவைகளை அளவோடு பயன்படுத்தினால் நன்மையே. வலைதள **வலைக்குள்** சிக்கி தூக்கத்தையும், ஆரோக்கியத்தையும்,நல்ல சுபாவத்தையும்,பரிசுத்தத்தையும் நல்ல பெயரையும் கெடுத்துக்கொள்ள வேண்டாமே?. ஜாக்கிறதை!.

❖ மேலே வாசித்த **மக்களை கவரும் நவீன** உபகரணங்கள் யாவும் **அந்திக்கிறிஸ்து** தான் வரும்முன் மக்களை தன் வசப்படுத்த அவனால் அனுப்பப்பட்ட கருவிகள் என்று நினைத்து நல்ல தேவைக்குமட்டும் அவைகளை பயன்படுத்தினால் அந்திக்கிறிஸ்துவின் ஆட்களை நீங்களே ஏமாற்றி தேவ பெலத்தினால் அவர்களை தோற்கடிக்கலாம். ஜெபத்தோடு செய்யுங்கள். ஜெயம் உண்டாகட்டும். ஜெபிப்போம். ❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

## கிறிஸ்தவர்களுக்கு சட்ட உதவி:

**இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் கிறிஸ்தவசபைகள் தாக்கப்படுகின்றன. சபை ஊழியர்கள், மிஷனரிகள் தாக்கப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, மதம்மாற்றம் செய்ய முயன்றார்கள் என்று கூறி எந்தவித ஆதாரமுமில்லாமல் பாஸ்டர்களையும், விசுவாசிகளையும் போலீஸ்லாக்கப்பிலும், சிலர் ஜெயிலிலும் அடைக்கப்படுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு உதவ ஆவிக்குரிய வக்கீல் தொழில்செய்யும் கர்த்தருடைய பிள்ளைகள் இந்தியா முழுவதும் ஒன்றாக இணைந்து UNITED CHRISTIAN FORUM என்ற பெயரில் உதவி இணைப்பு** Help Line **தொடங்கியுள்ளார்கள். உதவி தேவைப்படுவோர் இங்கு குறிப்பிடும் 1800 2084 545 என்ற எண்களில் தொடர்புக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வக்கீல்களுக்காக தேவனை துதிப்போம். இவர்களுக்காக தினமும் ஜெபிப்போம்.**

# கன்னியாகுமரி CSI திருமண்டலம் இணையம் (தோப்புவிளை) கூட்டங்கள்



**கன்னியாகுமரியில் உள்ள இணையம் (தோப்புவிளை)** என்ற ஊரில் அமைந்த CSI Church கூட்டங்கள் அனைத்தும் சிறப்பாக அமைந்தன. **Rev.Gnanadasan** அவர்களும் மற்ற ஆயர்களும் மிகச் சிறப்பாக ஒவ்வொரு நாளும் கூட்ட ஏற்பாடுகளை கவனித்தது பாராட்டப்படவேண்டியது. இக்கூட்டம் ஆசீர்வாதமாக அமைந்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

# கன்னியாகுமரி CSI திருமண்டலம் நெய்யூர் கஸ்பா HOME CHURCH கூட்டங்கள்



கர்த்தருடைய கிருபையில் இந்த பெரிய சபையில் நடந்த கூட்டங்கள் அனைத்தும் சிறப்பாக அமைந்தன. மக்கள் காண்பித்த அன்பு,அதுமட்டுமல்ல செய்தியை மணிகணக்காக கவனித்தவிதம் என்னை மிகவும் திருப்திகொள்ள வைத்தது. நெய்யூர் CSI ஆலயத்திரி சில டாக்டர்கள்,செவிலியர் மற்றும் ஜாமக்காரன் வாசக குடும்பங்கள் நேரில் சந்திக்க பேச வாய்ப்பு கிடைத்தது. தலைமை போதகர் **Rev.Dr.AR.Chelliah, Rev.G.Mancikaraj** (இணை போதகர்) செயலர்.திரு.ஜோகப் ஜெயக்குமார் அவர்களும் ஜெபத்தோடு கூட்ட ஏற்பாடுகளை செய்திருந்தனர். கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக.

# செய்திகள்

# ஆதார் அட்டை(ID) தகவல்கள்

## ஆதார் அட்டை பதிவு செய்வது எப்படி?

**ஆதார் அட்டை** என்னிடம் இல்லை. அதனை நான் பதிவு செய்வது எப்படி? இந்திய பதிவாளர் ஜெனரல் அவர்கள், மக்கள் தொகை கணக்கெடுப்பு மையத்தை தொடர்பு கொள்ளவும். முகவரி:

The Director, Directorate of Cences Operations, Tamil nadu, E-Wing, Third Floor, Rajaji Bhavan, Besant Nagar, Chennai-600 090, Phone: 91-44-24912993, Mail: dco-tam.rgi@nic.in




**ஆதார் பதிவு செய்தும் உங்களுக்கு கிடைக்க தாமதமானால்:**

ஆதார் அட்டைக்குப் பதிவுசெய்து அது கிடைக்கப் பெறாமல் இருந்தால், அவற்றின் விபரங்களை எப்படி அறிவது? SMSல் UID STATUS <14 digit EID> என டைப் செய்து 51969 என்ற எண்ணுக்கு அனுப்பவும். இலவச அழைப்பு எண்: 1800 300 1947 மூலம் போன் செய்யவும்: https://resident.uidai.net.in/check-aadhar-status இணையதளத்தில் பெறலாம்.

**ஆதார் அட்டை தொலைத்துவிட்டால்:**

தொலைக்கப்பட்ட ஆதார் அட்டையை திரும்ப பெறுவது எப்படி? https://eaadhaar.uidai.gov.in/ என்ற இணைதளத்தின்மூலம் பதிவிறக்கம்(Download) செய்து கொள்ளலாம்.

**தொலைக்கப்பட்ட ஆதார் பதிவுச்சீட்டு பெறுவது எப்படி?**

ஆதார் இணையதளமான https://resident.uidai.net.in உள் செல்லவும். பின்னர் “find UID/EID” என்பதினை அழுத்தவும். ஆதார் பதிவின்போது அளிக்கப்பட்ட பெயர் மற்றும் கைபேசி எண்ணை பதிவு செய்து OTP (ஒருமுறை குறியீட்டு எண்) பெறவும். பெறப்பட்ட OTP எண்ணை இணையதளத்தில் பதிவு செய்யவும். பதிவான ஆதார் எண் பதிவு எண்ணினை உங்கள் கைபேசியில் காணலாம்.

**ஆதார் அட்டையில் மறு திருத்தம் செய்வது எப்படி?**

ஆதார் விவரங்களை திருத்தம் செய்வது(Updation) எப்படி? பெயர்,விலாசம்,பிறந்ததேதி மற்றும் கைபேசி எண்ணை திருத்தம் செய்ய, இணையதளமான https://resident.uidai.net.in உள்சென்று செய்யலாம். விண்ணப்பம் எழுதி அதனுடன், அதனை சார்ந்த அடையாள ஆவணத்தை மண்டல UIDAI அலுவலகத்திற்கு தபால் மூலம் அனுப்பலாம்.

# இனி ஒவ்வொரு மாதமும் ஜாமக்காரன் வெளிவரும்:

‘ 2015 பிப்ரவரி மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் ஜாமக்காரன் தமிழ்& மலையாளம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிட தொடங்கிவிட்டோம். ஆனால் முன்புபோல் குறிப்பிட்ட தேதிகளில் ஜாமக்காரனை தபாலில் சேர்க்கஇயலாது. மலையாள மொழிபெயர்ப்புக்கும், தமிழ் ஜாமக்காரன் தயாரிக்கவும் போதிய நேரமும்,நாளும் கிடைக்காததால் அந்தந்த மாதத்தில் குறிப்பிட்ட எந்த தேதியிலும் ஜாமக்காரனை எதிர்பார்க்காதீர்கள். எப்படியாவது அந்தந்த மாதம் முடிவதற்க்குள் ஜாமக்காரனை அனுப்ப முயற்சி செய்கிறேன்.

‘ மாதாமாதம் ஜாமக்காரன் வெளிவர என்னை உற்சாகப்படுத்திய எல்லா வாசகர்களுக்கும்,பணஉதவி செய்த ஜாமக்காரன் வாசக குடும்பங்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

‘ தபால் சலுகை மீண்டும் கிடைக்கும்வரை மாதத்தில் எந்த தேதியிலும் ஜாமக்காரனை தபாலில் சேர்க்கலாம். பத்திரிக்கை ஊழியத்தில் கர்த்தரின் வழிநடத்துதல் தொடர்ந்து செயல்படுவதை நினைத்து தேவனை துதிக்கிறேன்.

JUNE 2015

Printed Book/Book Post

**Return Requested:**

**Dr.PUSHPARAJ**
**SALEM - 636 005**
**INDIA.**

Printed at P.M.Press,168,Arumuga Nagar, Salem-636 015
Edited & Published by **Dr.Pushparaj,** 89.Majeeth Street,
Old Suramangalam, Salem - 636 005. Tamil Nadu.INDIA.